உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ஙஅ.] விஷு ௵ ஆனி மீ [பகுதி-அ.

Vol. 38. June—July 1941. No. 8.

## கம்பராமாயணசாரம்

[தமிழ்ப்பெருங்கவி, முதுபெரும்புலவர்,

ஸ்ரீ. ராவ்சாகிப் வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

ஙஙசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### இந்திரசித்துவதைப்படலம்

இந்திரசித்தை இலக்குமணன் கொன்றதைக் கூறுவது.

யாதுநிகழ்ந்ததேன இராவணன், இந்திரசித்தை வினவுதல்

[ இந்திரசித்து விண்ணிற்பாய்ந்து மறைந்ததைக் கண்ணிற் கண்ட தேவர்கள், என்னமாயஞ்செய்வானோவென்று கலங்கினர்கள். இரத்தம்வழியும் புண்களோடு தன் எதிரேவந்த இந்திரசித்தை இராவணன் நோக்கி, 'உன் தோள்களில் அழுந்திய அம்புகள், செய்யத்தொடங்கிய யாகம் முற்றுப்பெறவில்லையென்பதை (நீ கூறுமலே) என்னை அறியச்செய்தன. தேகம் நடுங்குகின்றாய்.

சிந்தை தளர்ந்திருக்கின்றாய். கருடன்கிட்ட (வரக்கண்டு) படமொடுங்கிய பாம்புபோல்கின்றாய். (நீ இவ்வாறுதற்குக் காரணமாக) நிகழ்ந்ததைக் கூறுவாயாக' என்றான்.*

## இந்திரசித்தின் மறுமொழி

இந்திரசித்து, 'உன் தம்பி (எதிரிகளுக்கு உளவுசொல்லிக் கொடுத்து) நம்முடைய மாயச்செயல்களெல்லாவற்றையும் வீணாக்கிவிட்டான். இலக்குமணன், வானரசேனையோடுவந்து வேள்வியை அழித்தான். நான், போர்தொடங்கி, மும்மூர்த்திகளின் படைகளைத் தொடுத்துவிட்டேன். அவன், அவைகளைத் தடுத்துவிட்டான். மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் படைத்துப் பெருமைபடைத்த திருமாலின்படை இலக்குமணனை வலஞ்செய்துபோயிற்றென்றால், (அவனை வெல்லுதற்கு) அதனினும் வலிய படையுண்டோ? இராட்சசகுலம் செய்த பாவத்தால், கொடியபகையைத் தேடிக்கொண்டோம். இலக்குமணன் கோபங் கொள்வானானால், தானொருவனே மூன்றுலகத்தையும் முடித்து விடுவான்.† பிரமாத்திரம் விடுத்தால், அது, என்னை அழித்த

---

* தொடங்கிய வேள்வி முற்றப் பெற்றிலாத் தொழில்நின் றோள்க
ளடங்கிய அம்பே என்னை யறிவித்த அழிவில் யாக்கை
நடுங்கினை! மனமும் சாலத் தளர்ந்தனை! கலுழன் நண்ணப்
படங்குறை யரவ மொத்தாய்! உற்றது பகர்தி யென்றான்.

தொழில் - காரியம். யாக்கை - உடம்பு. சால - மிக. கலுழன் - கருடன். நண்ணுதல் - கிட்டுதல் - சமீபித்தல். அரவம் - பாம்பு. பகர்தி - சொல்லுவாய்.

† நிலஞ்செய்து விசும்புஞ் செய்து நெடியமால் படைநின் றானை
வலஞ்செய்து போயிற் றென்றால், மற்றினி வலிய துண்டோ!
குலஞ்செய்த பாவத் தாலே கொடும்பகை தேடிக் கொண்டேம்
சலஞ்செயின், உலக மூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே.

'நின்றான்' என்பது, இலக்குமணனையும், 'என்றான்' என்பது, இந்திரசித்தையும் குறித்தன. விசும்பு - விண். நெடியமால் - பெருமையுடைய விட்டுணு. சலம் - கோபம்.

மட்டில் அமையாமல் உலகத்தையழித்துவிடுமென்று அஞ்சி அதனை விடுத்தானில்லை. ஆதலால் திரும்பிவந்தேன். அவன் என்னைக் கொல்லத்துணிந்திருக்கின்ருன்'. ]

166 ஆதலா லஞ்சி னேனென் றருளலை யாசை தானச்
சீதைபால் விடுதி யாயி னனையவர்[1] சீற்றந் தீர்ந்து[2]
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்ப நன்மேற்
காதலா லுரைத்தே னென்ற னுலகெலாங் கலக்கி வென்றன்.

கொண்டுகூட்டு: 'ஆதலால், அஞ்சினேனென்றருளலை, சீதைபால் ஆசைதான் விடுதியாயின், அனையவர், சீற்றந்தீர்ந்து போதல்புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர். உன்மேல் (உள்ள) காதலால் உரைத்தேன்' என்ருன்.

பொருள்: (மூன்று) உலகங்களில் உள்ளாரெல்லாரையும், (நிலைகுலைந்து) கலங்கச்செய்து வென்றவனான இந்திரசித்து, (இலக்குமணன் என்னைக் கொல்லத் தீர்மானித்திருக்கின்ருனென்றேன்) 'அதற்காக அஞ்சினே(னாகி இங்கே வந்தே)னென்றெண்ணாதே. (உனக்கு நல்லதைக் கூறுதற்காக வந்தேன்.) சீதைமீதேயுள்ள ஆசையை விடுவாயானால், இராமலக்குமணர், (நல்லவர்களாதலால்,) கோபம்நீங்கி (நம்மைக் கொல்லாமல் இலங்கையை விட்டு)ப் போய்விடுவார்கள். இவ்வாறு அவர்கள், (காயிகமாக - உடம்புச்செயலாக—ச்செய்தலன்றி, நாம்) செய்த தீமைகளை (மானதமாக – உள்ளச்செயலாக)ப் பொறுத்துக்கொள்ளவும் செய்வர். (நான் இப்போது கூறியவைகளை) உன்மேலுள்ள அன்பினால் (உன் நன்மைகருதி) உரைத்தேன். (என் உயிர் போவதற்கஞ்சி உரைத்தேனல்லேன்.)' என்ருன்.

ஆதலால் - (இலக்குமணன் என்னைக் கொல்லத் துணிந்திருக்கின்ருனென்றேனல்லவா) அதற்காக. அஞ்சினே னென்றருளலை - அஞ்சினேனென்று எண்ணுதிருப்பாயாக. விடுதி - விடுவாய். போதல் - போகுதல். காதல் - அன்பு.

'அவன் வருவானென்றிருந்தேன்,' என்பதிலுள்ள 'என்று' போல, 'என்றருளலை' யென்பதில் உள்ள 'என்று,' 'என்றெண்ணி' என்ற பொருள் கொள்ளநின்றது. 'சாமி எழுந்தருளினர்' என்பதிற்போல, 'அருளலை,' என்பதில் உள்ள 'அருள்' உபசாரத்துணைவினையாம். 'போதலும்' என்பதில்

உம்மை இசைநிறை. 'தீமையும் பொறுப்பர்' என்பதில் உம்மையைப்பிரித்துக் கூட்டி, (இலக்கையைவிட்டுப் போவதேயன்றி நாம் செய்த) தீமையைப் பொறுத்தலும் செய்வரென்று பொருள்கூறப்பட்டது.

பாடபேதம்: [1] அன்னவர். [2] தீர்வர்.

இராவணன்கோபக்கூற்று

[ இவ்வாறு இந்திரசித்து கூறக்கேட்ட இராவணன், தோள்கள் குலுங்கப் பற்கள் வெளிப்பட்டு விளங்கச் சிரித்து, 'நீ இனிப் போர்க்குப்போதல் ஒழிவாய்போலும். புத்திமயங்கி அற்பமனிதனுக்கு அஞ்சியிட்டாய். அச்சமொழிவாயாக. வருந்தாதிருப்பாயாக. (வேறுதுணை யாதும் வேண்டாமல்) என் வில் ஒன்றுமட்டுமே துணையாகக்கொண்டு, அந்த மனிதரை இன்றே வெற்றிகொண்டு (அதனை இராக்கதருக்குத்) தருவேன்.' ]

167 முன்னையோ ரிறந்தா ரெல்லா மிப்பகை முடிப்ப ரென்றும்
பின்னையோர்[1] நின்ற ரெல்லாம் வென்றவர்[2] பெயர்வ ரென்றும்
உன்னைநீ யவரை வென்று தருதியென் றுணர்ந்து மன்றல்[3]
என்னையே நோக்கி யானிந்[4] நெடும்பகை கொண்ட தென்றன்.[5]

கொண்டுகூட்டு: 'யான் இந்நெடும்பகைகொண்டது, இப்பகை(யை) முன்னையோர் இறந்தாரெல்லாம் முடிப்பரென்றும் பின்னையோர் நின்றுரெல்லாம் (போரில்) வென்றவர் (ஆகிப்) பெயர்வரென்றும் நீ அவரை வென்று (வெற்றி) தருதியென்று உன்னை உணர்ந்தும் அன்று, என்னையே நோக்கி' என்றான்.

பொருள்: 'யான் இந்த (இராமலக்குமணர்) விரோதத்தை(ச் சீதையைக் கவர்ந்து தேடி)க் கொண்டது, இந்தப் பகைவரை இதன்முன் (போர்க்குப்போய்) இறந்தோரெல்லாம் ஒழிப்பாரென்று கருதியும், (போர்க்குப்போக) இருக்கின்றவரெல்லாம் (போரில்) வென்றவராய் மீள்வரென்று கருதியும், நீ அப்பகைவரை வென்று (வெற்றி) தருவாயென்று கருதியும் அன்று. (வேறு யாரைக் கருதி இந்தப்பகைகொண்டதெனில்,) என்னையே (என் வலிமையையே) கருதி' (என்பது).

தருதி - தருவாய். நோக்குதல் - கருதுதல் (தமிழகராதி).

பாடபேதம்: [1] பின்னையே. [2] வென்றவர்ப். [3] இன்ன நீ.......... இன்றல். [4] அன்றே. [5] தேடிக்கொண்டேன்,

168 பேதைமை யுரைத்தாய் மைந்த[1] வுலகெலாம் பெயரப் போராக்
காதையென் புகழி னோடு நிலைபெற வமரர் காண
மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை விடுவ தல்லாற்
சீதையை விடுவ துண்டோ இருபது திரடோ ளுண்டால்.[2]

கொண்டுகூட்டு: 'மைந்த! பேதைமையுரைத்தாய், உலகெலாம் பெயரப் போராக் காதை(யில்) என் புகழினோடு (நான்) நிலைபெற, அமரர் காண, மீது எழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவதல்லால், சீதையை, இருபது திரள்தோள் உண்டு ஆ(தலா)ல், விடுவதுண்டோ?'

பொருள்: 'மகனே! (சீதையை விடும்படி) அறிவற்ற ஆலோசனையைச் சொன்னாய். (நான் எதிரிகளை வெல்லுதல் திண்ணம். வெல்லேனாயினும்) உலகமெல்லாம் அழிகையிலும் அழியாத(தாய் நிலையாய்நின்றுநிலவும்) சரித்திரத்திலே (நான்) என் புகழுடம்போடு நிலைபெறும்படியாக, நிலையாததன்மையில் நீர்க்குமிழிபோன்ற பூதவுடம்பை விடுவதேயல்லாமல், சீதையை, (எதிரிகள் கைப்பற்றாதபடி காக்க) இருபது திரண்ட தோள்களிருத்தலால், விடுவதில்லை.'

'பேதைமை', பேதைமையான ஆலோசனைக்கு ஆகுபெயர். 'பெயரவும்' எனற்பாலது, உம்மைதொக்குப் 'பெயர' என வந்தது செய்யுள்வழக்கு. காதை - சரித்திரம் (தமிழகராதி). புகழ் புகழுடம்புக்கு ஆகுபெயர். அமரர் - தேவர். மீது எழு - (நீர்) மீது தோன்றுகின்ற. மொக்குள் அன்ன - நீர்க்குமிழிபோன்ற. யாக்கை - தேகம்.

சீதையைவிடுத்தல் மானக்குறைவானது; அதுவும் பிறவிப் பகைவரும் அடிமைப்பட்டவருமான தேவர் காண விடுதல் மிகவும் மானக்குறை வென்பதுகொண்டு 'தேவர்காணச் சீதையைவிடுவதுண்டோ!' என்றான். 'தேவர்காண யாக்கையைவிடுவது', 'தேவர்காணச் சீதையைவிடுவது' என இரண்டுக்கும் பொருந்தும்படி 'தேவர்காண' என்பது அமைக்கப்பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கது.

இரண்டுதோள்களேயிருந்தாலும் சீதையைப் பிறர் கைப்பற்றாதபடி காத்துவைத்துக்கொள்ளற்பாலேனான நான், இருபதுதோள்களுடையவனா யிருக்கும்போது, விடமாட்டேனென்பான், 'சீதையைவிடுவதுண்டோ இருபதுதிரள்தோள் உண்டால்' என்றான்.

பாடபேதம்: [1] பிள்ளாய். [2] திரடோளுண்டாய், திண்டோளுண் டாய்.

169 வென்றிலே னென்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றவ[1] னன்றே மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்[2]
பொன்றுத லொருகா லத்துத்[3] தவிருமோ பொதுமைத் தன்றே
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதி யுண்டோ.

கொண்டுகூட்டு: 'வென்றிலேனென்றபோதும், இராமன்பேர்நிற்குமாயின், யானும் வேதமுள்ளளவும் நின்றவனன்றே? ஒருகாலத்துப் பொன்றுதல் தவிருமோ? (அது) பொதுமைத்தன்றே? இன்றுளார் நாளை மாள்வார், புகழுக்கும் இறுதியுண்டோ?'

பொருள்: 'நான் (போரில்) வெற்றிபெற்றிலே(னாய் இராமனாற் கொல்லப்பட்டே)னென்றாலும், (அந்த) இராமன்பேர் என்றைக்கும் நிலைத்திருக்குமானால், (அதனோடு) என்பேரும் நிலைத்திருக்குமன்றோ? (எக்காலமாயினும்) ஒருகாலத்தில் சாதல் (நிகழாது) ஒழியுமோ? அது, (பிராணிகளுக்கெல்லாம்) பொதுவானதன்றோ? இன்று வாழ்வார் நாளைச் சாவார். புகழுக்கு முடிவுண்டோ?'

'பொன்றுதல்', 'தவிரும்', 'பொதுமைத்து' என்ற இரண்டு வினைகளுக்கும் எழுவாய்.

பொன்றுதல் - சாதல்; வேதமுள்(ள) அளவும் - வேதம் இருக்குங் காலம்வரை. நித்தியமாக - சாசுவதமாக. தவிருதல் - ஒழிதல். பொதுமைத்து - பொதுமையுடையது - பொதுவானது.

முந்தியபாட்டில் 'என்புகழினோடு நிலைபெற' என்றது, இந்தப்பாட்டில் அநுவதித்துக்கூறப்பட்டது. (அநுவதித்தல் - முன்கூறியதை விரித்து விளங்கக்கூறுதல்.)

பின்வரும் 'இராமன்பேர்நிற்கும்' என்பதனோடு பொருந்த, 'யானும் நின்றவன்' என்பதற்கு 'என்பேரும் நிலைத்துநிற்ப'தென்று பொருள்கூறப்பட்டது.

பாடபேதம்: [1] நின்றுளன். [2] ஆகின். [3] காலத்தும்.

[ 'யான் சீதையை இராமனிடம்விட்டேனென்று தெரிந்தவுடனே, தேவர்கள் என்னைக் கிட்டிக் கட்டிக்கொண்டுபோவதல்லாமல், என்னை யான் (பழைய இராவணன்) என்று கருதுவாரோ? திக்குவிசயஞ்செய்த நான், செத்தாலும், சாமானியமானசாவு சாக

மாட்டேன். (என்னுடைய பராக்கிரமத்தைக்காட்டி வீரச்சாவு சாவேன்.)* உனக்குப் பலசொல்லுவதிற் பயனில்லை. நீ உன் இருப்பிடஞ்சேர்ந்து உடம்பில் தைத்திருக்கிற அம்புகளைப் பிடுங்கிப் போரினல் ஏற்பட்ட சிரமத்தைப்போக்கி, இராப்பொழுதைக் கழிப்பாயாக' என்றுகூறி எழுந்து 'உடனே போருக்குப் போதற்குத் தேர்கொண்டுவருக' என்று கட்டளையிட்டான் (இராவணன்).

## இந்திரசித்து, இராவணன் போர்க்குப்போதலைத் தடுத்துத் தான்போதல்.

இந்திரசித்து, போர்க்கெழுந்த இராவணன்பாதங்களில் விழுந்து வணங்கி, 'ஐயனே! கோபத்தை ஒழித்தருள். யான் உனக்கு உறுதிமொழிகூறத்துணிந்தபிழையைப் பொறுத்தருள். யான் போரில் இறந்தபின், என்மொழிகள் நன்மையானவை யென்பதைக் காண்பாய்' என்று கூறி இரதமேறினன். தனக்குள்ள படைக்கலங்களெல்லாவற்றையும், 'இவைகளை அடைக்கலம் போலக்கொள்' என்று ஈசன் அருளிய படைக்கலங்களையும் தேரில் வைத்து, வேண்டுவார்க்கு வேண்டியபொருள்களைத் தானஞ் செய்து, (தன் நன்மொழிப்படி நடவாது நாசமடையப்போகிறுனே யென்று) இராவணனைக் கண்ணீர்பெருகக் கடைக்கண்ணுற்பார்த்துக்கொண்டுபோனுன்.

இலங்கையிலுள்ளாரெல்லாரும் எழுந்து தொடர்ந்து 'நாங்கள் உன்னைப் பிரியோம், பிரிந்தால் சாவோம்' என்று தொடர, 'நான் மனிதரை வென்றுவருவேன். நீங்கள் இங்கிருந்து இராசனைக் காப்பாற்றுங்கள்' என்று கூறினுன்.

---

* விட்டனன் சீதை தன்னை யென்றலும், விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லால், என்னை யானெனக் கருது வாரோ?
பட்டன னென்ற போதும் எளிமையிற் படுகி லேன்யான்
எட்டினே டிரண்டு மான திசைகளை யெறிந்து வென்றேன்.

படுதல் - சாதல். எட்டினேடு இரண்டுமானதிசை - (ஆகாயம் பாதாளம் உள்பட) பத்துத்திக்கு. எறிந்து - (எறிபடைகளை - கைவிடுபடைகளை) வீசியெறிந்து. எறிதல், அழித்தலுமாம். 'குறும்பெறிந்தன்று' (பு. வெ. 1, 8. தமிழகராதி).

இந்திரசித்து இரதாரூடனாய்ப் போர்க்களத்துக்குப்போய்க் கொண்டிருக்கும்போது, அவன் பாய்ந்து மறைந்த விசும்பை நோக்கி அவனை எய்தற்குச் சித்தமாய்க் கையில் வில்லைப்பிடித்து நின்ற இலக்குமணனும், விண்ணிற் சென்றவன் ஒன்றும் செய்ய வில்லையாதலால் எங்கேயோ சென்றானாதல்வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த விபீடணனும் தேரோசையைக் கேட்டார்கள்.

## இந்திரசித்தின் இரதவருணனை

அந்தத் தேர், பொற்கொடியும், இடிமுழக்கம்போல அதிர்ந்து உருளைகள் உருளும் ஓசையும், எங்கும் இழைக்கப்பெற்ற இரத்தினங்களின் பேரொளியும் உடையதாய் (ஒரே ஒளிமயமாய்)க், கடல் நடுவிலிருந்து கடல்நீரைக்குடிக்கும் வடவாமுகாக்கினி கடலினின்று வெளியேவந்தாற்போலவும், மேருச்சிகரம் உருண்டாற் போலவும் வந்தது. அந்த இரவு, பகல்போல ஆகும்படி, (பேரொளியுடையதாய்) வந்த அந்தத் தேர், குரங்குகள் குடல்கள் குழம்பவும், திக்கசங்கள் நிலைகெட்டோடவும், மலைகள் குலுங்கவும், கடல்கள் கலங்கவும், உலகம் நிலைகுலையவும், செல்லும்வழியில் நிலம் குழிதலும் கிழிதலும் பொருந்தவும், (அந்த இரவின் இருளுக்கு மேல் வேறோர்) இருள் வந்ததென்னும்படி புழுதிபறக்கவும், (தேர் பூமியை அழுத்தப் பூமி அதைச் சுமந்துகொண்டிருக்கும் தலையை அழுத்துதலால்) ஆதிசேடன் படம்நொந்து வருந்தவும், இலக்குமணனுக்கு எதிரே வந்தது.*

---

* கடல்மறு கிடவுல குய்யநெடுங் கரியிரி தரவெதிர் கவிகுலமும்
குடல்மறு கிடமலை குலையநிலம் குழியொடு கிழிபட வழிபடரும்
இடமறு கியபொடி முடுகிடவும் இருளுள தெனவெழு மிகலரவின்
படமறு கிடஎதிர் விரவியதவ் விருள்பக னுறவரு பகையிரதம்.

கரி - (திசை) யானை. எதிர் கவிகுலம் - (இராக்கதரை) - எதிர்க்கும் குரங்குக்கூட்டம். வழிபடரும் இடம் - (தேர்) வழிச்செல்லும் இடம். மறுகிய பொடி - சுழன்ற புழுதி. முடுகிட - விரைய - விரைந்துபறக்க. எழும் இகல் அரவு - மிகுந்த வலிமையுடைய பாம்பு - ஆதிசேடன். விரவுதல் - அடைதல் (தமிழகராதி). பகையிரதம் - பகைவனான இந்திரசித்தின் தேர்.

பொடி, இருள் உளதென முடுகிட என இயைத்துப் பொருள்கொள்ளத் தகும்.

## இந்திரசித்தும் இலக்குமணனும் பொருதல்

அப்போது, இராக்கதசேனை ஆர்த்தது. குரங்குச்சேனை மனஞ்சுழன்று வேர்த்தது. இந்திரசித்து அம்புகளை விடுத்தான். இலக்குமணன், எதிர் அம்புகள் தொடுத்தான். இருவரம்புகளாலுமுண்டாகிய நெருப்புப் புகையுடன் நிறைந்தது. 'இப்பொழுது, இந்திரசித்தைத் தப்பவிட்டால், பின்பு வெல்லமுடியாது' என்று விபீடணன் கூற, இலக்குமணன், மலைகள் பொடிபடவும், உலகு நிலைகுலையவும், ஆதிசேடன் அச்சம் அடையவும் செய்யும் இடியேறுகள்போன்ற வலிய அம்புகளை ஆயிரக்கணக்காக எய்ய, அவைகளுக்கெதிராக இந்திரசித்தும் அத்துணை அம்புகளைவிட, இருவரம்புகளும் தீயினும் அதிகமாகச் சுவலித்தெரிவனவாய்க் கொல்லுதலாற் சிதறியோடின இராக்கத வானரசேனைவீரர்கள் (எரியும் அம்புகளால் உண்டான வெப்பம் பொறுக்கமாட்டாராய்ப்) போனபோன திசைகளிலெல்லாம் புரள்பவர் அளவற்றவரானார். இரு பெருவீரரும், இரு மேகங்கள் மழைபொழிந்தாற்போல, அம்பு பொழிந்தார்கள். இந்திரசித்து விடுத்த கணைகள் முறிபட்டன. இலக்குமணன் விடுத்தவை இந்திரசித்தின் உடலுட்புகுந்து இரத்தங்குடித்தன. திரும்ப, இந்திரசித்து எய்த அம்புகள், இலக்குமணனை ஊறுபடுத்தவில்லை(யென்பானேன்), அவன் கவசத்துள்ளேயே நுழையமாட்டாமற்போயின; ஆயினும், அனுமானுடலிலே புற்றுள் நுழையும் பாம்புகள்போலப் புகுந்தன. அவைகளை அவன் (வீராவேசங்கொண்டிருந்ததனால்) உணர்ந்தானில்லை.

(அனுமானுடம்பு துளைபடக்கண்ட) இலக்குமணன் கோபித்து இந்திரசித்தின்கவசம் அழியும்படி கூரிய கணைகளை ஏவினன். இந்திரசித்து, தன்கவசம் துளைபட்டதனால், கோபங்கொண்டு எய்த அம்புகள், குறித்தஇடங்களுக்குப் போய்ச்சேராமல் இடையிலேயே வேகம் ஓய்ந்து விழுந்தன. அதுகண்டு, தேவர்கள் உவகையுற்று, ஆரவாரித்தனர். (தான் எய்த அம்புகள் மேலேகூறியவாறு பயன்படாமற்போனதைக்கண்ட) இந்திரசித்து, வில்லினால் வலிமையைச்செலுத்தல் முடியாதென்றெண்ணி, 'வேகமாகச்செல்வாயாக' என்றுகூறிப் பிரமதேவனுடையகுமாரனை புலத்தியமுனிவன்

அளித்த வேலை விடுத்தான். அந்த வேல் (போர்நிகழ்ந்த அந்த இரவில்) சூரியனைப்போலப் புறப்பட்டு எதிரே வருதலைக் கண்ட இலக்குமணன், அது நடுவே இற்று இரண்டுதுண்டாகும்படி, தவசிகள்சாபத்தைக்காட்டிலும் மிக்கவலிமையுடைய வெய்யகணை யொன்றை விடுத்தான். பின்பு, இந்திரசித்தின் அம்பறாத்தூணி அற்றுவிழும்படி அம்பெய்தான். அதன்பின், இலக்குமணன், 'இவன் (இந்திரசித்து) தேருள்ளமட்டும் தொலையான். என் அம்புகளால் இந்தத்தேரிற் பூட்டப்பட்டிருக்கிற குதிரைகள் கொல்லப் படாமலும் தேர்க்கட்டு (தேர் உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டிருக்கிற பொருத்துக்கள்) வெட்டப்படாமலும் இருக்கின்றன'* என்று ஆராய்ந்தறிந்து ('இத்தேரைப் பயனற்ற தாக்குதற்கு, இதுவே உபாயம்' என்று கருதி,) ஒருகணையினால் தேர்ப்பாகன் தலையைத் தரையில்வீழ்த்தினான்.

இந்திரசித்து, சாரதியற்றதேரைத் தானே செலுத்துவானாகி, (அம்பறாத்தூணி அறுக்கப்பட்டொழிந்தமையால் அம்புகள் நெருங்கத்தைத்து நிறைந்திருந்த) தன் உடம்பாகிய அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளைப் பறித்தெடுத்து இலக்குமணன் மேலும் ஏனையோர்மேலும் எய்து எல்லாரும் திடுக்கிடும்படி ஆரவாரித்தான். (இவ்வாறு இந்திரசித்து செய்த அருஞ்செயல்களைக் கண்ட) தேவர்கள், அவன் 'வீரரென்பார்கட்கெல்லாம் முன்நிற்கும் வீரர்வீரன்' என்று தங்களுள்ளே பேசி, அவன்மீது தெய்வப் பொற்பூக்களைச் சிந்தினார்கள். ]

170 எய்தவன்[1] பகழி யெல்லாம் பறித்திவ[2] னென்மே லெய்யும்
கைத்தடு மாறு துள்ள முயிரினங் கலங்கா[3] யாக்கை
மொய்கணை கோடி கோடி மொய்க்கவு மிளைப்போன் றில்லான்[4]
ஐயனு மிவனோ டேஞ்சு மாண்டொழி லாற்ற[5] லென்றான்.

---

* இப்படலத்துக்கு முந்திய நிகும்பலையாகப்படலத்தின் கடைசிக் கவியில் 'அழிவிலாத் தேர்கொடன்றிப் போர்த்தொழில்புரியலாகாது' என்று போர்க்களத்தைவிட்டுப்போன இந்திரசித்து, திரும்பிப் போர்க்குப் புறப்பட்டபோது, அழியாதகுதிரைகள் பூட்டிய அழியாததேரில் வந்திருக்கிறானென்பது ஊகிக்கத்தக்கது. அவன் இப்போது கொண்டுவந்திருக்கிற வில்லும் அழியாத வில்லென்பது பின் கூறப்படுவதினால் தெரியவரும்.

கொண்டுகூட்டு: ஐயனும், 'இவன் (யான்) எய்த வன்பகழியெல்லாம் பறித்து, என்மேல் எய்யும்! கை நடுமாறாது! உள்ளம் உயிர் இ(ன்)னம் கலங்கா! யாக்கை மொய்கணை கோடிகோடி மொய்க்கவும் இளைப்பு ஒன்று(ம்) இல்லான்! ஆண்தொழில் ஆற்றல் இவனோடு எஞ்சும்' என்றான்.

பொருள்: இலக்குமணன், 'இவன், (தன்மேல் யான்) எய்த வலியகணைகளையெல்லாம் பறித்து (எய்த) என்மேலேயே எய்கின்றான்! (தன்னுடலில் தைத்திருக்கிற அம்புகளைப் பிடுங்குதலாலுண்டாகும் நோவினால், பிடுங்கும்போதாவது அவைகளை எய்யும் போதாவது இவன்) கை நடுங்காதிருக்கின்றது! உள்ளமும் உயிரும் கலங்கவில்லை! இவனுடம்பில் அம்புகள் கோடி கோடியாக(த் தைத்து) மொய்த்திருந்தும், இவன் சோர்வு சிறிதும் இல்லாதிருக்கின்றான்! வீரச்செயலும் வல்லமையும் (இவன் இறக்கும்போது) இவனோடிறந்துவிடும்!' என்று கூறினான்.

வன்பகழி - வலிய அம்புகள். மொய்த்தல் - நெருங்குதல். இளைப்பு - சோர்வு. ஒன்று(ம்) - சிறிதும். உம்மை தொக்குநின்றது. ஐயன் - உயர்ந்தோன் - இலக்குமணன்.

முந்தியபாட்டில் தேவர்கள் வியந்தார்களென்றிருத்தலால், இலக்குமணனும் என்பதில் உம்மை இறந்ததுதழுவிய எச்சவும்மையாம்.

'உயிர் இனங் கலங்கா' என்பதற்கு, உயிர் இன்னும் கலங்கவில்லையென்ற செம்பொருளன்றிப் பின்வரும் அரும்பொருளும் கூறலாம். அது வருமாறு:—

உயிரினம் (- உயிர்க்கூட்டம்) ஆன பஞ்சப்பிராணன்கள் (—உடலிலுள்ள பிராணன், அபானன், வியானன், சமானன், உதானன் என்ற ஐவகை வாயுக்கள்) கலங்காதிருக்கின்றன.

பாடபேதம்: [1] எய்தன. [2] பறித்தவன். [3] உயிர்நின்று கலங்காது, உயிரின்று கலங்காது, உயிரினக் கலங்காது. [4] முடிகின்றில்லான். [5] ஆற்ற.

## விபீடண இலக்குமணர் பேச்சு

[ 'இந்திரசித்து, (மாயப்போர்செய்யக்கருதி நேராகப் போர் செய்தலை நிறுத்திவிட்டுத்) தேரை வானத்துக்குச்செலுத்தி (அங்கே மறைந்திருந்து) மாயப்போர் செய்தாலும் செய்வான்; பகலில் இறப்பானேயன்றி, (இராக்கதருக்குப் பலந்தருவதாகிய)

இரவில் இறவான்' என்று விபீடணன் கூற, இலக்குமணன், 'முன் போலல்லாமல், இப்போது இந்திரசித்து இங்கேயே இறப்பதல்லாமல் இவ்விடத்தைவிட்டுப்போதற்கு ஒருபோக்குமில்லை. அவனைக் கொல்லும் என் அம்புகள், அவன் எங்கே சென்றாலும், அங்கே சென்று கொல்லும். அவன் வலிமைநீங்கியிருக்கின்றான். ஆதலால், இப்போதே வெற்றியடைவோம்' என்று மறுமொழி கூறினான்.

### சூரியோதயவருணனை

அப்போது, சூரியன் உதயமானான். அவன், சிவந்தநிறத்தோடு தோன்றுதலாலும் உடம்பில்தோன்றும் அளவற்ற செங்கிரணங்களாலும் இரதாரூடனாயிருத்தலாலும், இலக்குமணனம்பு தைத்துப் பெருகிய இரத்தந் தோய்ந்து சிவந்த உடம்பிலே அந்த இரத்தம்பட்டுச் சிவந்த அம்புகளோடு தேரிலேசெல்லும் இந்திரசித்தைப் போன்றான்.

### வானோர் மகிழ்ச்சி

'பொழுது விடிந்தது. சூரியன் தோன்றினான். இராக்கதருக்கு அநுகூலமான இருள் நீங்கியதனால், மாயையும் வலிமையும் குறைந்து இந்திரசித்து இறந்திடுவான்' என்று இமையோர் ஆரவாரித்தார்கள்.

### விபீடணன் எச்சரித்தல்

'சிவபிரான் அளித்த அழியாத தேரும் வில்லும் உள்ளமட்டும் இந்திரசித்து போரில் அழிந்திடான்' என்று விபீடணன் எச்சரிக்கை செய்தான்.

### எச்சரிக்கப்பெற்ற இலக்குமணன்செயல்

இலக்குமணன், (அழியாதனவான தேர் குதிரைகளை அவமாக்குதற்குச் சாரதிதலையை அறுத்த என் எண்ணம் நிறைவேறாதபடி, இந்திரசித்து, சாமர்த்தியமாகத் தானே சாரத்தியஞ்செய்து சமாளித்துக்கொண்டான். இனி, அவன் சமாளித்தற் கிடங்கொடுக்காத உபாயம் இதுவே' யென்றெண்ணித்) தன் வில்வித்தைத்திறமையால், தேரின் கடையாணிகளைக் கழற்றி, அச்சுகள்வேறு சக்கரங்கள் வேறாகப் பிரித்திட்டான். சக்கரமற்ற தேரைச் செல்லச்செய்யவல்லனவல்லனவாயின குதிரைகள்.

## இந்திரசித்தின் எதிர்ச்செயல்

இந்திரசித்து, (செல்லுதலொழிந்த) தேர்த்தட்டில் வைத்திருந்த ஆயுதங்களையெல்லாம் அள்ளியள்ளிப் பிரயோகித்தான். அவைகளை இலக்குமணன் அம்புகளால் அறுத்துத்தள்ளினன். (ஆயுதங்களனைத்தும் செலவானவுடனே) இந்திரசித்து, சொல்லத் தொடங்கிய சொல்லைச் சொல்லிமுடிக்கும் நேரத்துக்குமுன்னுகை (– அதிவேகமாக) விண்ணிற்பாய்ந்து அண்டம்பிளக்க ஆரவாரித்தான். அந்த ஓசையை எல்லாரும் கேட்டனர். ஓசைசெய்த அவனை யாரும் கண்டிலர், (அவன் மறைந்திருந்தனல். ஆயுதமில்லாதவனுன) அவன், வரபலத்தினுல் கல்மாரிபொழிந்தான். அதனுல் வானரர் செல்லுந்திசை தெரியாது தியங்கித் தலைகளும் உடல்களும் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்தார்கள்.

இந்திரசித்துச் சொரிந்த கல்மாரி காணப்பட்டதன்றி, அவன் காணப்படாமையால், அவன் எங்கிருந்தாலும் அவனைத் தாக்கும் படியாகத் திருமாலின் (விராட்புருட) வடிவம்போல் எங்கும் வியாபிக்கும்படி அம்புகளை இலக்குமணன் எல்லாத்திசைகளிலும் இடைவிடாமல் எய்தான். அப்போது, (தான் உள்ள இடத்தை அடைந்த அம்புகள் தாக்கப் புண்பட்டு இரத்தமயமான உடலினனுகித் தன் மாயவித்தையால் தன் உடம்பை மறைக்கவல்லவனுயிருந்தானேயன்றித் தன் இரத்தத்தை மறைக்கவல்லமையற்றவனுயிருந்த) இந்திரசித்தின் (இரத்தம்பொதிந்த) உருவம் (அவன் மறைந்திருந்த) கருமேகத்திடையே செம்மேகம்போலத் தோன்றியதை இலக்குமணன் கண்டான். கண்டவன், (இவன் அழியாத தேரும் வில்லும் உடையனுக இருக்குமளவும் இவனை வெல்லமுடியாதென்று விபீடணன் கூறியதுகொண்டு,தேரை அழியாது பிரித்தது போல, வில்லையும் அழியாது பிரிப்பேனென்றெண்ணி, இந்திரசித்து பிடித்திருந்த வில்லோடும் பூண்டிருந்த ஆபரணங்களோடும் பூமியில் விழும்படி (பாதிச்சந்திரன்போன்ற முனையுடைய) அர்த்தசந்திர பாணத்தை எய்து கையைக் கொய்தான்.

## வில்லோடு வீழ்ந்த இந்திரசித்தின் கைவருணனை

யுகாந்தகாலத்திலே ஊழிக்காற்றினுல் தாக்குண்டு இந்திர வில்லோடு பூமியில்விழும் மேகத்தை ஒத்தது, இலக்குமணன் அம்புபட்டுத் தரையில்விழுந்த இந்திரசித்தின் விற்பிடித்த கை.

வில், பாதிச்சந்திரனாகவும், வில்லை விரல்களாற்பிடித்த கை, பாதிச் சந்திரனைக் கௌவிய படத்தோடுகூடிய பாம்புத்தலையாகவும், மற்ற நீண்ட கைப்பகுதி, பாம்பின் நெடிய உடம்பாகவும், இந்திரசித்தின் விற்பிடித்த கை, பாதிமதியைக் கௌவிய ஆதிசேடனை ஒத்தது. 'சூரியன் வீழ்ந்தாலும், சந்திரன் வீழ்ந்தாலும், மேருமலை வீழ்ந்தாலும், விழாத இந்திரசித்தின்கை விழுந்ததென்றால், (இன்ன போது முடியுமென்று உணரப்படாத) உயிர்வாழ்க்கையை உவப்பதனால் என்னபயன்?' என்றார்கள் தேவர்கள்.

### இந்திரசித்தின்கை விழக்கண்ட இராக்கதர் கலங்க, அவர்களை வானரர் மாய்த்தல்

இந்திரசித்தின்கை அற்றுவிழக் கண்ட இராக்கதர், தம்தம் தலைபறுபவர்போலக் கலங்கினார்கள். அவர்களை, வானரர், போர்க்களத்தைவிட்டு ஊர்க்குத் திரும்பிப்போகாதபடி, நகங்களாலும் பற்களாலும் மரங்களாலும் மலைகளாலும் தாக்கிக் கொன்று, கொல்லப்பட்டவர் ஆவிகளால் (வீரசுவர்க்கமான) பொன்னுலகத்தைப் புதுக்குடியேற்றினார்கள்.

### இலக்குமணன் இந்திரசித்தின்தலையைத் துண்டித்தல்

கை அறுந்துவிழுந்தவுடனே, இந்திரசித்து, தேவதேவனான சிவபிரான் அளித்தருளிய (கடைசியாகப் பிரயோகித்தற்குச் சேமித்துவைத்திருந்த) சூலாயுதத்தைக்கொண்டு 'உன்னை முடித்த பின்பே நான் முடிவேன்' என்று கூறிக்கொண்டு, தன்னை (இலக்குமணனை)க் கொல்லும்படி (மறைந்தநிலைமை நீங்கி வெளிப்பட விண்ணிலே) தோன்றியவனை இலக்குமணன்கண்டு, இவன்தலையைத் துண்டிக்குங்காலம் வந்ததென்றெண்ணினான். ]

171 மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் பால[1]
இறையவ னிராம னென்னு[2] நல்லற மூர்த்தி யென்னில்
பிறை யெயிற் றிவனைக்[3] கோறி யென்றொரு பிறைவாய் வாளி
நிறைவுற[4] வாங்கி விட்டா னுலகெலா நிறுத்தி[5] நின்றான்.

கொண்டுகூட்டு: 'மறைகளே தேறத்தக்க, வேதியர் வணங்கற்பால இறையவன், இராமன் என்னும் நல்லறமூர்த்தியென்னில், பிறை யெயிற்று இவனைக் கோறி' என்று ஒரு பிறைவாய் வாளி(யை) நிறைவுற வாங்கிவிட்டான், உலகெ(ல்)லாம் நிறுத்திநின்றான்.

பொருள்: 'வேதங்களே ஆராய்ந்தறியத்தக்கவனும் (*பிரம வித்துக்களான) பிராமணர் வணங்குதற்குரியவனுமான (முழுத் தனி) முதல்வன் இராமனென்னும் (திருநாமமுடைய) தரும மூர்த்தியே (என்பது சத்தியம்) ஆனல், இந்திரசித்தைக் கொல்வாயாக' என்று ஓர் அர்த்த சந்திரபாணத்தை விட்டான். (அதனல், அரக்கரால் அழியாதபடி காத்து) அகில உலகத்தையும் நிலைபெறச் செய்து (அச்செயலால் ஏற்பட்ட புகழுடம்போடு எக்காலத்தும்) நிலைநின்ருனன்.

மறை - வேதம். பால் - உரிமை (தமிழகராதி). வணங்கற்பால - வணங்குதற்குரிய. இறைவன் - தேவர்தலைவன் - கடவுள். நன்மை - சிறப்பு. அறம் - தருமம். மூர்த்தம் - உருவம். நல் அற மூர்த்தி - சிறந்த தருமசொரூபி. பிறையெயிற்று இவன்-பிறைபோன்ற (கோரப்)பல்லையுடைய இந்திரசித்து. கோறி - கொல்லுதி - கொல்வாய். பிறைவாய்வாளி - பிறைத்தலையம்பு - அர்த்தசந்திரபாணம். வாளி(யை) நிறைவு உற வாங்கி விட்டான் - அம்பை, (வில்லைப்) பூரணமாக வளைத்து, (நாணில் ஏற்றி) விடுத்தான்.

பாடபேதம்: [1] பாலான். [2] இராமனேயக், இராமனென்னின். [3] எயிற்றவனே. [4] நிறையுற. [5] நிறுத்த.

[ அந்தத் தெய்வவாளி, முனையில் தீப்பற்ற வேகமாகச் சென்று, இந்திரனுடைய வச்சிராயுதமும், நான்முகனுடைய பிரமாத்திரமும், திருமாலுடைய சக்கராயுதமும், சிவபிரானுடைய பாசுபதாத்திரமும் (தாம் இந்திரசித்தைக் கொல்லும்பேறு பெறவில்லையே என்று) நாணமடையும்படி இந்திரசித்தின் தலையை அறுத்துத்தள்ளித் தேவர்கள் மலர்மழைபொழிய (இலக்குமணனிடம் திரும்பி) வந்தது.† இந்திரசித்தின் அறுத்துத்தள்ளப்பட்ட

* பிரமவித்துக்கள் - பிரமத்தை அறிந்தவர்கள்.

† நேமியும் குலிச வேலும் நெற்றியில் நெருப்புக் கண்ணன்
நாமவேல் தானும் மற்றை நான்முகன் படையும் நாணத்
தீமுகம் கதுவ ஓடிச் சென்றவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை வானோர் சிந்தப் போந்தது பகழிப் புத்தேள்.

நேமி - சக்கராயுதம். குலிசவேல் - வச்சிராயுதம். நாமம் - அச்சம். வேல் - ஆயுதம். நான்முகன்படை - பிரமாத்திரம். முகம் - முனை (தமிழகராதி). கதுவுதல் - பற்றுதல். போந்தது - வந்தது. பகழிப்புத்தேள் - பாணதேவதை.

தலை பூமியிலே விழுதற்கு முன்னாக, அவன் உடம்பு, மேகம் யுகாந்தகாலத்துக் காற்றினால் (மோதப்பட்டுப் பூமியில்) மின்னல் இடித்தலுடன் விழுந்தாற்போல, (வலக்கையிற்) பற்றிய (பளபளப்பான) சூலத்தோடும் (அங்கமெங்கும் தைத்து ஒளிவிடும்) அம்புகளோடும் (தரையில் தாக்கும் ஓசையோடும்) விழுந்தது.* செம்பட்டைத் தலைமயிருடனும் இரண்டு பிறைச்சந்திரன்கள்போன்ற இரண்டு கோரப்பற்களுடனும் இரண்டு குண்டலங்களுடனும் இந்திரசித்தின் தலையும் விழுந்தது. உடலில் உள்ள உயிர் போனவுடனே உணர்வும் ஐம்பொறிகளும் அந்தக்கரணமும் உடலைவிட்டு நீங்கிப்போதல்போல, இந்திரசித்து இறந்துபோனவுடனே போர்க்களத்தைவிட்டு இராக்கதர் இலங்கைநோக்கி ஓடினார்கள்.

## இந்திரசித்து இறந்ததுபற்றிய தேவர்கள்செயலும் திரிமூர்த்திகள்செயலும்

'வில்லாளராயுள்ளாரெல்லாருக்கும் மேலானவனான இந்திரசித்து இறந்தவுடனே, இலங்கைவேந்தனுக்கு (இந்திரசித்து இறந்தபின்) அரசாட்சி நடவாது' என்று (அளவுகடந்த) ஆனந்த(ப் பைத்திய)ங் கொண்ட தேவர்களெல்லாரும் (சந்தோஷமிகுதியால்

---

* அற்றவன் தலைமீ தோங்கி யண்டமுற் றணுகா முன்னம்
பற்றிய சூலத் தோடும் உடல்நிறை பகழி யோடும்
எற்றிய காலக் காற்றால் மின்னொடும் இடியி னோடும்
இற்றொரு காள மேகம் வீழ்ந்தென வீழ்ந்த தியாக்கை.

அவன்தலை அற்று மீது ஓங்கி - இந்திரசித்தின்தலை (இலக்குமணனம்பியால்) அறுபட்டு(த் துள்ளி) மேலே எழும்பி. அண்டம் - பூமி. '[illegible]ர்கொண்ட அண்டத்தும்' (அரிச். பு. பாயி. 3. தமிழகராதி). அண்டம் உற்று அணுகா - அண்டம் அணுகி உற்று (விகுதி பிரித்துக்கூட்டப்பட்டது.) - பூமியை நெருங்கியடைந்து. பகழி - அம்பு. எற்றுதல் - மோதல் (தமிழகராதி). மின் (- மின்னுதல்); இடி - (- இடித்தல்) முதனிலைத் தொழிற்பெயர்கள். இறுதல் - கெடுதல் (தமிழகராதி). இற்று - (நிலை)கெட்டு. காளம் - கருமை.

'கொண்ட படையும் உடல்நிறை பகழியும் மின்னலுக்கும், வீழ்ந்தபோது தோன்றிய ஒலி இடிக்கும் உவமை.' வை. மு. கோ.

தாம் செய்வது பைத்தியக்காரச்செய்கையென்றுணராமல், (அரையிலுடுத்த) ஆடையை அவிழ்த்து உயரப்போம்படி (மேலேவீசி) ஆரவாரித்தபோது, அவர்கள் சமணருடைய (நிர்வாணிகளான) கடவுளரை ஒத்தார்கள்.* திருமாலும் சிவபெருமானும் பிரமதேவனும் கருணைநிறைந்த நெஞ்சினராய்த் தங்கள் திருமேனிகளை மறைக்காமல் போர்க்களத்துக்கு வந்துநின்றார்கள். அவர்களை மற்றெல்லாரோடும் (போரில் இறவாது உயிரோடிருந்த) குரங்குகளும் கண்டன. (இறவாத குரங்குகள் திரிமூர்த்திகளைத் தெரிசித்ததன் பலனாக ஏற்பட்டாற்போல) இறந்த குரங்குகளெல்லாம் உயிர்பெற்றெழுந்தன. இது, 'அறந்தலைநின்றார்க்கில்லை அழிவெனும் அறிஞர் வார்த்தை'யை நிரூபித்தது.

## இந்திரசித்தின் தலைகொண்டுவந்த அங்கதனை இராமன் பாராட்டுதல்

அங்கதன் இந்திரசித்தின்தலையைக் கையிலேந்தி முன்செல்ல, இலக்குமணன், அனுமான்தோள்மேலமர்ந்து, போகும்வழிமுழுதும் தேவர்கள் இடைவிடாமல் தொடர்ந்து பூமழைபொழிவதனால்

---

* வில்லாள ரானார்க் கெல்லாம் மேலவன் விளித லோடும்
செல்லாதவ் விலங்கை வேந்தற் கரசெனக் களித்த தேவ
ரெல்லாரும் தூசு நீக்கி எறிட ஆர்த்த போது
கொல்லாத விரதத் தார்தங் கடவுளர் கூட்டம் ஒத்தார்.

விளிதல் - இறத்தல். தூசு - ஆடை. எறிடுதல் - உயர்த்தல். ஆர்த்தல் - ஆரவாரித்தல். கொல்லாதவிரதத்தார் - சமணர்.

ஆடைவீசுதல்(-மகிழ்ச்சியைக்காட்டும் அடையாளம்); இதனை வெள்ளைவீசுதலென்றும் கூறுவதுண்டு. இதுவரை இராமன்பக்கம் வெற்றியுண்டானபோதெல்லாம் ஆரவாரமோ, மலர்சொரிதலோ, இரண்டுமோ, செய்துவந்த வானோர், இந்திரசித்து வெல்லப்பட்ட இப்போது, ஆரவாரித்தலும் (இந்திரசித்து சிரத்தையறுத்த இலக்குமணன்பாணத்தின்மீது) பூமழைபொழிதலும் செய்தமட்டோடு நில்லாமல், ஆடைவீசியது—அதுவும் பித்தர்போல மானங்கெடுதலையுணராமல் அரையாடையை அவிழ்த்துவீசியது—இந்திரசித்தை வென்ற வெற்றி மற்றெல்லா வெற்றிகளிலும் மிகமிக மேம்பட்ட வெற்றியென்பதை விளக்கியது. அது அப்படிப்பட்ட வெற்றியென்பதை, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அருந்தவஞ்செய்வார்க்கே பிரசன்னமாகிக் காட்சியளிக்கும் திரிமூர்த்திகள் போர்க்களத்துக்கு எழுந்தருளிக் குரங்குகள் உள்பட எல்லாருக்கும் பிரத்தியட்சமாகத் தோன்றித் தரிசனம் அளித்தது விசேடமாக விளக்கியது.

ஏற்பட்ட நடைப்பந்தல் நிழலிலே இராமனிருந்த இடத்தைநோக்கிச் செல்வானானன். அங்கதன் கையிலேந்திவரும் இந்திரசித்தின் தலையை இராமன் தூரத்திலே கண்டான். கண்டவன், 'சந்திரனுக்கு உண்டாகியுள்ள மறு மாறுததுபோல (இராவணன் என் மனைவியைக் கவர்ந்ததனால்) எனக்குண்டாகிய மறு மாறுதென்று வருந்திக்கொண்டிருந்த யான், (இந்திரசித்து இறந்ததனால் இராவணன் மாள்வதும் சீதை மீள்வதும் திண்ணமாதலால், மாறுத சந்திரன்மறுப்போலன்றி) என் மறு துடைத்தொழிக்கப்பட்டுத் துயரம் தொலையப்பெற்றேன்' என்று எண்ணிக்கொண்டிருக்கும் போது, கிட்டவந்துவிட்ட அங்கதனைநோக்கி,

'...................................இந்திரசித்தின்
வன்தலை எடுத்து நீமுன் வருதலால் வானரேச,
என்தலை எடுக்கப் பெற்றேன், இனிக்குடை எடுப்பன்'

என்றான்.

(இனிக் குடையெடுப்பனென்றது, இனி (முடிவான) வெற்றிபெற்று (அதற்கடையாளமாக வெண்கொற்றக்) குடையெடுப்பேன் என்பதை உணர்த்தியது.)

தன் (இராமன்) வனவாசகாலம் கழிந்து திரும்பிச் சேமமாக வருவதை எதிர்பார்த்திருக்கும் பரதனைப்போல, இராமன், இலக்குமணன் இந்திரசித்தைவென்று தீங்குறாமல்வருவதை எதிர்பார்த்திருந்தான்.

## இலக்குமணன்வருதலை இராமன் காணல்

இராமன், இலக்குமணன் வருவதைக் கண்டான். கண்டவன் கண்களின் நீர்த்தாரை, அன்புப்பெருக்கோ? (பிரிந்ததை நினைந்ததனால் உண்டாகிய) துன்பப்பெருருக்கோ? (பிரிந்தவன் திரும்பி வந்ததனாலுண்டாகிய) ஆனந்தப்பெருக்கோ? எலும்பும் உருகி நீராயொழுகும்படியான கருணைப்பெருக்கோ? அது யாதென அறிந்துசொல்வார் யாவர்?*

---

* .........நயன மென்னும் தாமரை சொரியும் தாரை,
அன்புகொல்? அழுக ணீர்கொல்? ஆனந்த வாரி யேகொல்?
என்புகள் உருகிச் சோரும் கருணைகொல்? யார தோர்வார்.

## இந்திரசித்தின்தலையைப் பாதகாணிக்கையாகவைத்து இலக்குமணன் இராமனை வணங்கல்

இலக்குமணன், தன்னைக்கண்டு எதிர்கொண்டுவந்த இராமன் பாதங்களிலே, இளவெயில்வீசும் செம்பட்டைத் தலைமயிரும் நிலவு பரப்பும் பற்களும் (இறக்கும்போது கோபத்தால்) மடித்திருந்த பெருவாயும் உடைய இந்திரசித்தின்தலையைப் பாதகாணிக்கையாகவைத்து வணங்கினான்.

## இலக்குமணனை இராமன் தழுவிப் புகழ்தல்

இராமன், (வியப்புடன்) இந்திரசித்தின்தலையைநோக்குவதும், (அந்தத் தலையை அறுத்துவீழ்த்த வீரத்)தம்பியின் விசயலக்குமி வீற்றிருக்கும் தோள்களை நோக்குவதும், (அத்தலையை அறுத்த அம்பை எய்த) வில்லைநோக்குவதும், (இலக்குமணனுக்கு வாகனமாகவும் வேறுவகையாகவும் இந்திரசித்தை வெல்லுதற்குத் துணையாயிருந்த) அனுமானது வலிமையை நோக்குவதும், (இந்திரசித்து தலையறுக்கப்பட்டதுகண்டு கரைகடந்த களிப்புக்கொண்ட) தேவர்கள் (அவர்கள் தலைவரான திரிமூர்த்திகள்) செயல்களை நோக்குவதும், (அபூர்வவீரனும் மாயாவியுமானவனைக்)கொன்ற திறத்தை நோக்குவதுமாகிக் களிப்புக்கொண்டு (அந்தக் களிப்புமிகுதிகாரணமாக ஒருசிறிதுநேரம்) ஒன்றும் உரையாடாதிருந்தான்.* பின்பு காலில்விழுந்துகிடந்த தம்பியைக் கையாலெடுத்துத் தழுவினான். அப்படித்தழுவியதனால் தம்பிமார்பிலும் தோள்களிலும் தோய்ந்திருந்த இரத்தச்சுவடுகள் தமயன்மார்பு தோள்களில் பதிந்தவை, கார்மேகத்தின்மீது செம்மேகம் படிந்தாற்போலவும் கருமலைமேல் சிவந்த இளவெயிலெறித்தாற்போலவும் தோன்றின. ]

---

* தலையினை நோக்கும், தம்பி கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கும், நின்ற மாருதி வலியை நோக்கும்,
சிலையினை நோக்கும், தேவர் செய்கையை நோக்கும் செய்த
கொலையினை நோக்கும், ஒன்றும் உரைத்திலன் களிப்புக் கொண்டான்.

கொற்றவை - விசயலக்குமி. தழீஇய - தழுவிய. மாருதி - அனுமான். சிலை - வில்.

172 கம்ப மதத்துக் களியானைக் காவற் சனகன் பெற்றெடுத்த
கொம்பு மென்பா லினிவந்து குறுகி னாளென் றகங்[1]குளிர்ந்தேன்
வம்பு செறிந்த மலர்க்கோயின் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி யுடையான் பகையஞ்சா னென்னு மாற்றந் தந்தனையால்.

கொண்டுகூட்டு: 'கம்பமதத்துக் களியானைக் காவற்சனகன் பெற்றெடுத்த கொம்பு என்பால் வந்து குறுகினாளென்று அகம் குளிர்ந்தேன். வம்புசெறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில் "தம்பி உடையான் பகை அஞ்சான்" என்னும் மாற்றம் தந்தனை.'

பொருள்: '(இலக்குமணா! நீ இந்திரசித்தைச் செயித்ததனால், இராவணன் வெல்லப்படுவது திண்ணம். அதனால் மீட்சிபெற்றுச்) சீதை என்பால் வந்துசேர்ந்தாளென்று நான் மனங்குளிர்ந்தேன். "பிரமன்படைத்த பேருலகத்திலே "தம்பியுடையான் பகைக்கு அஞ்சான்" என்னும் (ஆன்றோர்) வாக்கை (உன்செயலால் மெய்யென்று) உணரச்செய்தாய்.'

கம்பமதத்துக் களியானைக் காவற்சனகன் - கட்டுத்தறியிற் கட்டப்படுகின்ற மதச்செருக்குடைய (இராசசின்னமான பட்டத்து) யானையையும் காக்கப்படும் நாட்டையும் உடைய சனகராசன். காவல் - காக்கப்படும்நாடு. 'காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி' (புறநா. 5. தமிழகராதி). கொம்பு - கொம்புபோல்வாளான சீதை. குறுகுதல் - அடைதல். வம்பு - வாசனை. மறையோன் - பிரமன்.

இப்பாட்டின் ஈற்றடி 'எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரியதென்றான்' (சீவகசிந்தாமணி—7. கனகமாலையாரிலம்பகம் 204) என வருவதை நினைவுறுத்துகின்றது.

பாடபேதம்: [1] நன்றெனு.

[ இளையோர் மூத்தோர்க்குச்செய்யும் பணியை, அன்புமிகுந்த இடத்து மூத்தோர் இளையோர்க்குச் செய்வதாக) இராமன், இலக்குமணன்முதுகிற் பூட்டியிருந்த அம்பறாத்தூணியைநீக்கி, மார்பைச் சுற்றிக் கட்டியிருந்த கவசத்தைக் கழற்றி அம்புசெய்த புண்களை ஒற்றியபின்பு அவனைப் பலமுறை தழுவினான். ]

## இராமன் விபீடணனைப் புகழ்தல்

173 ஆடவர் திலக நின்னா லன்றிக[1] லனும னென்னும்
சேடனா லன்று வேறோர்[2] தெய்வத்தின் சிறப்பு மன்று
வீடணன் றந்த வென்றி[3] யீதென விளம்பி[4] மெய்ம்மை
யேடவி ழலங்கன் மார்ப னிருந்தன[5] னினிதி னிப்பால்.

கொண்டுகூட்டு: ஏடு அவிழ் அலங்கல் மார்பன், 'ஆடவர்திலக, ஈது, நின்னால் அன்று, இகல் அனுமனென்னும் சேடனாலன்று, வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று, வீடணன் தந்தவென்றி' என மெய்ம்மைவிளம்பி இனிதின் இருந்தனன்; இப்பால்.

பொருள்: இராமன், (இலக்குமணனைத் தழுவிக்கொண்டிருந்த போது, விபீடணன் வரக்கண்டு அவன் இந்திரசித்தின் தோல்விக்கு முக்கியகாரணமென்பதை நினைந்து, இலக்குமணனை நோக்கிப்) 'புருடோத்தமனே! (இந்திரசித்தைவென்ற) இந்த வெற்றி, உன்னால் தரப்பட்டதன்று; வானரசிரேட்டரான வலிய அனுமானால் தரப்பட்டதுமன்று; (தெய்வங்களென்று சொல்லத் தக்க உங்களினின்றும்) வேறானதோர் தெய்வம் தந்ததுமன்று; (வேறு யார்தந்ததோவெனில்,) விபீடணன்தந்த வெற்றியாகும்,' என்று (உபசாரமாகவன்றி) உண்மையாகக் கூறினான்.

ஆடவன் - ஆண்மகன். திலகன் - சிறந்தவன். இகல் - வலி (தமிழகராதி). சிறப்பு - சம்மானம். 'சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க.' (குறள். 590. தமிழகராதி). வீடணன் - விபீடணன். வென்றி - வெற்றி. விளம்பி - சொல்லி. மெய்ம்மை - உண்மை. ஏடு அவிழ் அலங்கல் மார்பன் - இதழ் விரிந்த மாலை (அணிந்த) மார்பன் - இராமன்.

அனுமான்கண்முன் வதைக்கப்பட்ட சீதை மெய்ச்சீதையன்று பொய்ச் சீதையென்பதையும், இந்திரசித்து வெற்றிபெறுதற்காக இரகசியமாக நிகும்பலையாகஞ்செய்கிறானென்பதையும், விபீடணன் தெரிவித்திராவிட்டால், இலக்குமணனது வில்வித்தைத் திறமையும் அனுமானது அபார தேகபலமும் தெய்வசகாயமும் இருக்கவேயும், இந்திரசித்தை வென்றிருக்கமுடியாதென்பான், 'இலக்குமண! இந்த வெற்றி நீ தந்ததன்று, அனுமான் தந்ததன்று, தெய்வம் தந்ததன்று, விபீடணன்தந்தது' என்றானென்றார். இவ்வாறு கூறியது உபசாரமாகக்கூறியதன்று, உண்மையாகக்கூறியதென்பார், 'மெய்ம்மைவிளம்பி' என்றார்.

'அங்கு இராவணன் இந்திரசித்து இறந்ததையறிந்து புலம்புவதைக் கூறப்போகின்றாராதலால், "இப்பால் இனிதினிருந்தன" னென்றார்' வை. மு. கோ.

இராம ராவண சம்பந்தமான சம்பவங்களுள் முக்கியமானவை, சூர்ப்பனகை அங்கபங்கம், சீதை கவரப்படுதல்; இந்திரசித்து இலக்குமணுதியரை நாகபாசத்தாற் கட்டுதல், அந்தக் கட்டைக் கருடன் அகற்றல்; அவர்கள் பிரமாத்திரத்தால் இறத்தல், சஞ்சீவிமருந்தினுல் பிழைத்தல்; மாயாசீதை வதை, உண்மைச்சீதை சேமத்தை விபீடணன் தெரிவித்தல்; இலக்குமணனுல் இந்திரசித்துக் கொல்லப்படுதல், இராவணன் விபீடணன்மேல் ஏவிய வேலால் இலக்குமணன் இறத்தல்: ஆகியவைகளாம். இந்த முக்கிய சம்பவங்கள், ஒவ்வொன்றும் ஒருபக்கத்தாருக்குத் துன்பமும் மறுபக்கத்தார்க்கு இன்பமும் தருவதாகவும் இரவு பகல்போல மாறுபட்ட இரட்டைகளாகவும் நிகழ்ந்தவைகள்.

இராமராவணசம்பந்தமாக, ஒன்றற்கொன்று மறுதலையாக நிகழ்ந்த இந்தப் பல இரட்டைச்சம்பவங்களுக்குப்பின் இவைபோன்ற இரட்டைச் சம்பவம் நிகழவில்லை; இவ்வாறு கூறியது எதனுலெனில், இந்தச்சம்பவங்களுக்குப்பின் நிகழ்ந்த முக்கியசம்பவமான (இராவணன்பக்கத்தார்க்குத் துன்பமான) இராவணவதத்துக்குப்பின் அதற்கு மறுதலையாக (இராமன் பக்கத்தார்க்குத் துன்பந்தரும்) எந்தச்சம்பவமும் நிகழவில்லையாதலால் என்பது.

பாடபேதம்: [1] அன்றிந்த. [2] மற்றோர். [3] வெற்றி. [4] விளம்பும். [5] மார்பரிருந்தனர்.

இந்திரசிந்துவதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

---

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் விக்ரமஹு பங்குனிமீ 25, 26, 27 (1941-ம்ஹு ஏப்ரல்மீ 7, 8, 9)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறியவர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| தொடர் எண். | பதிவு எண். | |
|---|---|---|
| 1 | 16 | க. சச்சிதானந்தன், பரமேசுவர பண்டித ஆசிரிய கழகம் (Parameshvara Training College), திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 2 | 5 | V. சுப்பிரமணியன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட். |
| 3 | 19 | நா. கந்தசாமி, பரமேசுவர பண்டித ஆசிரிய கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 4 | 17 | ஆ. கனகசபை ஷெ ஷெ |
| 5 | 21 | அ. ஆறுமுகம் ஷெ ஷெ |
| 6 | 15 | க. நாகலிங்கம் ஷெ ஷெ |
| 7 | 14 | செ. பழனித்துரை ஷெ ஷெ |
| 8 | 31 | க. பரமசாமி, நயினாதீவு, யாழ்ப்பாணம், Ceylon. |
| 9 | 24 | க. நாகேந்திரம்பிள்ளை, சரஸ்வதி வித்தியாசாலை, வேலணை கிழக்கு, வேலணை, (Kayts), Ceylon. |
| 10 | 18 | சி. வேலுப்பிள்ளை, பரமேசுவர பண்டித ஆசிரிய கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 11 | 36 | வ. ஆ. சின்னத்துரை, ஆசிரியர், இடைக்காடு, அச்சுவேலி, யாழ்ப்பாணம், Ceylon. |

| | | |
|---|---|---|
| 12 | 12 | சு. பசுபதி, பரமேசுவர பண்டித ஆசிரிய கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |
| 13 | 25 | க. நடராசா, கரவெட்டி மேற்கு, கரவெட்டி, Ceylon. |
| 14 | 13 | மா. மாணிக்கம், பரமேசுவர பண்டித ஆசிரிய கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், Ceylon. |

---

## பாலபண்டிதபரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 48 | R. இராஜகோபாலன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை மதுரை. |
| 2 | 47 | G. கோபாலகிருஷ்ணன் ஷை ஷை |

---

## பிரவேசபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 63 | வை. இராஜாராம், ஸ்ரீமத். சிவஞானபாலயசுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம், தென்னாற்காடு ஜில்லா. |

(முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்)

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 67 | பா. ஏகாம்பரம், ஸ்ரீமத். சிவஞானபாலயசுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம், தென்னாற்காடு ஜில்லா. |
| 2 | 68 | ந. ஆறுமுகம் ஷை ஷை |
| 3 | 64 | R. சங்கரன் ஷை ஷை |

---

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*

14—7—'41. அக்கிராசனாதிபதி.

# பட்டினத்தார்*

[ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

காவிரியாறு கடலோடுகலக்கும் அழகிய இடத்திலே, மிகப் பழங்காலத்திலே, சோழஅரசர்களின் தலைநகராய்ச் சிறப்புற்று விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் வெகுகாலம்வரையிலும் வாணிகத்திலும் செல்வத்திலும் சிறந்திருந்தது. அந்நகரிலே சுமார் ஆயிரம் வருடங்களுக்குமுன்னே திருவெண்காடர் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். பட்டினத்தார், பட்டினத்துப்பிள்ளையார் என்னும் சிறப்புப் பெயர்களும் அவர் வாழ்ந்த ஊர்பற்றி அவருக்கு இடப்பட்டன. அவர் சிறந்த சிவபக்தர், ஞானி. பாரனைத்தும் பொய்யெனத் துறந்த துறவி. அதனல் அவரைப் பட்டினத்துஸ்வாமிகள் என்றும் பட்டினத்து அடிகள் என்றும் சொல்வதுண்டு. அவர் இயற்றிய பனுவல்களில் ஐந்து, சைவசமயத்திருமுறைகளுள், பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள், முதலாவது கோயில்நான்மணிமாலை. கோயில் என்பது சிதம்பரம். இரண்டாவதாகச் சேர்க்கப்பட்டது திருக்கழுமலமும்மணிக்கோவை. திருக்கழுமலம் என்பது சீர்காழி. சீயாழி எனப்படுவது இதுதான். மூன்றுவது திருவிடைமருதூர்மும்மணிக்கோவை. நாலாவது பனுவல் திருவேகம்பமுடையார்திருவந்தாதி. திருவேகம்பமுடையார் என்பது கச்சி எனப்படும் காஞ்சீபுரத்தில் சிவன்கோவிலில் அமர்ந்துள்ள தெய்வத்தின்பெயர். ஐந்தாவதுபனுவல் திருவொற்றியூர் ஒருபா ஒருபது. இந்த ஊர்தான் சென்னைக்கு அடுத்த திருவொற்றியூர். இங்கே பட்டினத்தாருடைய சமாதி ஒன்று இருக்கிறது.

---

* இது, சென்னை அகில இந்திய ரேடியோநிலையத்தில் 18—6—41-ல் ஒலிபரப்பப்பட்டது. சென்னை ரேடியோநிலைய நிர்வாக அதிகாரியின் அநுமதிபெற்றுப் பிரசுரிக்கலாயிற்று.

இவ்வாறு பதினோராந்திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ள ஐந்து பிரபந்தங்களைத் தவிர வேறு பல பாடல்கள் பட்டினத்தார்பாடல்கள் என்று தற்காலத்திலே வழங்கிவருகின்றன. இவற்றை இயற்றிய பட்டினத்தார் வேறொருவர். அவர் பிற்காலத்திலே வாழ்ந்தவராக இருக்கவேண்டும் என்பது இரண்டு பட்டினத்தார்களுடைய பாடல்களிற் காணப்படும் சொற்களிலும் செய்யுள்நடையிலும் கருத்திலும் கொள்கை முதலியவற்றிலும் காணும் வேறுபாடுகளால் தெரிகிறது. பிற்காலத்துப் பட்டினத்தார் இயற்றியவை கோயில்திரு அகவல்கள் மூன்று, திருவேகம்பமாலை, பொது முதலிய பாட்டுக்கள். தாயார் இறந்தபின் தகனக்கிரியைசெய்தபோது,

'முன்னை யிட்ட தீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்கமூள்கவே'

என்று பாடியதாகச் சொல்லப்படும் பட்டினத்தார் பிற்காலத்தவரே. இவர் இருநூறு, முந்நூறுவருஷங்களுக்குமுன் வாழ்ந்திருக்கலா மென்று தோன்றுகிறது.

இவருடைய பாடல்களிற் சில, மக்களுடைய சாமானியமான பேச்சுநடையைத் தழுவி மிகவும் உருக்கமாய் அமைந்திருக்கின்றன. நற்குணம் ஒன்றும் இல்லாத என்னை 'ஏன் படைத்தாய்?' என்று தெய்வத்தைப்பார்த்துக் கேட்பதாக இவர் பாடிய பாட்டைப் பாருங்கள்: அது,

'பொல்லாதவன் நெறி நில்லாதவன் ஐம் புலன்கள்தமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன் மெய் யடியவர்பாற்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின் திருவடிக்கன்
பில்லாதவன் மண்ணில் ஏன்பிறந்தேன்? கச்சி ஏகம்பனே'

என்பது.

வேறொருபாட்டில் இவர் தம்முடைய மனத்துக்குத் தாமே உபதேசமொழிகளைக் கூறுகிறார். அதைக் கேளுங்கள். அது,

'ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர்முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே'

என்பதாம்.

இனி, பழங்காலத்திலே வாழ்ந்த பட்டினத்தாரைச் சிறிது கவனிப்போம். அவர் இயற்றிய பாக்களைக்கொண்டு அவருடைய மனப்பான்மையைத் தெரிந்துகொள்வோம். அவர் சிவனிடத்து அளவிறந்த பற்றுள்ளவர்; எனினும், பிறதெய்வங்களை இகழ்ந்துரைக்கும் குறுகிய மனநிலையுடையவரல்லர். 'நிலவுபோன்ற பாற்கடலிலே, அலைகள் பாதத்தை மெல்லெனத் தடவத் தென்றலாகிய சாமரை வீச, ஆதிசேஷனுடைய பணமகுடத்திலுள்ள நாகரத்தினங்கள் யாவும் பிரகாசிக்க, அழகிய மிருதுவான ஸர்ப்பசயனத்தில் நீலமணிக்குன்றொன்று கிடந்ததுபோல் விஷ்ணு யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார்' என்று அவர் வருணிப்பதைக் கேளுங்கள்:

'தண்ணில வெனவிரி வெண்ணிறப் பாற்கடல்
ஒல்லொலித் தரங்கம் மெல்லடி வருடக்
காமர்தென் காலெனுஞ் சாமரை அசையத்
துத்திநெய்ப் பரந்து பைத்தபை யகலில்
அணிகிளர் பலகதிர் மணிவிளக் கொளிரச்
சுடிகைவாள் அரவ நெடியபூ வணைமேல்
மறுவிலா நீல வரைகிடந் தென்ன
அறிதுயிலமர்ந்த அச்சுதன்'

என்று திருக்கழுமல மும்மணிக்கோவையில் அவர் மனமார வருணிக்கிறார். ஆயினும், கேவலம் படைப்புத்தொழில் அத்தனை மேன்மையானசெயலன்று என்பது அவருடைய கொள்கை போலும். ஏனெனில், 'உலகம் முழுவதையும் நான் எண்ணியபடியே இயற்றிவிட்டேன்'—என்று இறுமாப்புக்கொண்டு தன்னுடைய சிறுமையைப் பிரமதேவன் காட்டியதாக அவர் கூறுகிறார்.

'........................வரசரோ ருகத்தன்
நெருக்கிய புவனப் பெருக்கினைத் தனது
திண்ணிய மனத்திடை எண்ணியாங் கியற்றி
எம்மால் எவையும் இயன்றன என்னச்
செம்மாந் திருக்கும் சிறிய வாழ்க்கையும்'

என்று குறைவாகவே கூறுகிறார்; என்றாலும், அவர் சமரசக் கொள்கையுடையவர்தாம் என்பதைத் திருவொற்றியூர் ஒருபா ஒருபதிற் காணப்படும் பா ஒன்று நன்றாகப்புலப்படுத்துகிறது.

'திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
... ... ... ...
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்
... ... ... ...
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க்கு அவ்வவை யாகி'

என்று பலவகையாய்ப் பலர் வணங்கும் தெய்வங்களாக அவரவர்க்குச் சிவபிரானே காட்சியளிப்பதாக அவர் எல்லாத்தெய்வங்களையும் ஒன்றுபடுத்திச்சொல்லுகிறார்.

தெய்வம் எங்கும் இருப்பது; எல்லாம் ஆவது; எல்லாம் வல்லது; யாவும் உணர்வது; பொறிகளால் உணரத்தகாதது; அகத்தால்மட்டுமே உணரப்படுவது என்பவற்றை வற்புறுத்த, 'எவ்வுலகிலும் காண்பனவெல்லாம் நீயே யாகி நின்றதோர் நிலையே' என்றும், 'அற்றமில் வலியோய்' என்றும், 'முற்றுணர்பெரியோய்' என்றும்,

'உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறுப்புத் துளையின் இருசெவிக் கெட்டாது
உறுப்பில்நின் றெழுதரும் உள்ளத்து ஓசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறும் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டைவழி யன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்'

என்றும் பாடி அறிவுறுத்துகிறார். சராசரங்களனைத்தும் தெய்வத்தி னின்றே தோன்றித் தெய்வத்தினிடத்தே அடங்குகின்றன என்ப தை அழகிய உவமை ஒன்றால் விளக்கிக்காட்டுகிறார். நுரையும், அலைகளும், நீர்க்குமிழிகளும், கடலின் நீரும் கடலினின்றே எழுந்து, வேறாகத்தோன்றிக் கடலிலேயே மீண்டும் மறைவதுபோலவே சரா சரங்களின் இயல்பும் என்கிறார்.

தெய்வம் கருணைமிக்கது; அன்பர்க்கு இரங்குவது என்பதை,

'கருணை முதுவெள்ளம்' என்றும்,

'நிறைந்த அன்பலரின் உறைந்த செந்தேன்' என்றும்,

'அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி'

என்றும் குறிப்பிடுகிறார்.

யாவர்க்கும் அருளும் தெய்வத்தின் அருள் ஒருவனுக்குக் கிட்டாதிருந்தால், அது தெய்வத்தின் குற்றமன்று, அதை நாடிச் செல்லாத அவனுடைய குற்றமேயாகும் என்பதை மூன்று அழகிய உவமைகளால் விளக்குகிறார்.

தெய்வத்தை வழிபடுவதற்கு மனைவி மக்கள் முதலியோரைத் துறக்கவேண்டியதில்லை, உடலை நெருப்பில் வாட்டவேண்டியதில்லை, குளிரில் ஒடுக்கவேண்டியதில்லை, காடும் மலையும் தேடிச்செல்ல வேண்டியதில்லை, உணவைக் குறைக்கவேண்டியதில்லை, மாளிகை யிலே இன்பங்களினிடையே மக்களும் சுற்றத்தாரும் கூடஇருந்து மகிழும் நிலையிலும் உண்மையாகத் தெய்வத்தினிடத்தே சிந்தை யைச் செலுத்தினால் முத்தி நிச்சயமாய்க் கிடைக்கும் என்று அவர் உறுதி சொல்லுகிறார்.

'மனத்தைத் தூயதாக்கித் தன்னை முற்றும் மறந்து, தெய்வத் தையே சிந்தித்துக்கொண்டிருந்தால் தெய்வம் களிகொண்டுவந்து, மனத்தில்நின்று கூத்தாடும்' என்பதை,

'தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன்றினும் நட
மாடும் அம்பலவாண'

என்னும் அடிகளால் குறிப்பிடுகிறார். அப்படித் தெய்வம் வந்து காட்சியளித்தபோது, 'தனக்கு ஒன்றிலும் வெறுப்பும் இல்லை, விருப்பும் இல்லை' என்று தெரிவித்தபோதிலும், ஒரே ஒரு சிறு வேண்டுகோள் அவர் செய்துகொண்டார். உன்னுடைய அடியார்களைக் குறிப்பிடும் அட்டவணையிலே என்பெயரையும் சேர்த்துக் கொண்டாற்போதும் என்கிறார்.

'.........................................நின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன்'

என்பது காண்க.

இவர் பாடிய பாடல்கள் சொல்நயம் மிகுந்தவை; உவமைகள் நிரம்பியவை; கடலை ஒட்டிய உவமைகளையும், வாணிகசம்பந்தமான உவமைகளையும், விவசாயசம்பந்தமுள்ள உவமைகளையும் இவர் நன்றாகக் கையாளுகிறார். மாதுளம்பழத்தை இவர் வருணித்திருக்கும் அடிகள், இவர் இயற்கையழகில் ஈடுபட்டவர் என்பதை நன்றாகக் காட்டுகின்றன.

'பத்திகொள் நித்திலம் ஒத்துற நிரைத்த
பசும்பொனிற் செய்த தசும்புபல தொக்க
தோற்றம் போல வீற்றுவீற் றமைந்த
தீங்கனி பணைதொறும் தூங்கு மாதளை'

என்கிறார்.

இவர் மாமரத்தை வருணிப்பதைக் கேளுங்கள்.

'வித்துருமத்தினை ஒத்த செங் தளிரும்
ஒளிர் வயிடூரியக் குளிர்மது மலரும்
மேவிடு வண்டெனும் நீலமா மணியும்
மரகத மென்ன விரவுகாய்த் திரளும்
மறுவில்மா மணியெனும் நறியசெங் கனியும்
கிடைத்தசீர் வணிகரிற் படைத்த மாந்தருவும்'

இவ்வாறெல்லாம் பாடிய பட்டினத்தார் சிறந்த ஞானி; சிறந்த மார்க்கதரிசி; சிறந்த கவி. நிறையக்கொடுப்பினும் குறையாச்செல்வமாகிய கலைச்செல்வமே அவர் நமக்கு அளித்த பெருஞ்செல்வம்.

# கம்பனும் உவமவலங்காரமும்

[புன்னாலைக்கட்டுவன் வித்துவான். ஸ்ரீ. சி. கணேசையரவர்கள்.]

கம்பன், பொருள்கட்கேற்ப உவமைகளை எடுத்துக்காட்டிப் படிப்போரெவரும் அப்பொருள்களை நேரேகண்டாற்போலக் கண்டு சுவைக்குமாறு காண்பித்துப் பாக்களை இயற்றுந்திறமும், ஒருவமையையே இடத்துக்கேற்பப் பொதுத்தன்மைகளை வேறுபடுத்திப் பலவேறுவகையாக ஆளுந்திறமும் எவராலும் போற்றப்படத் தக்கனவாம்.

உவமைகளெல்லாம் பொருள்களைப் புலப்படுத்தற்கே ஆளப் படுவன எனத் தொல்காப்பிய உரையாசிரியரு ளொருவராகிய பேராசிரியரும் கூறுவர். தொல்காப்பியரும், உவமவியலைப் பொரு ளதிகாரத்துக் கூறியதும் இக்கருத்துநோக்கியே.

சங்கச்சான்றோர்கள், தஞ்செய்யுள்களிலே பொருள்களை அவற் றினியல்புகளை எடுத்துக்கூறிக் காட்டலோடு, பெரும்பாலும் உவமைகளைக்கூறியும் காட்டுவர். ஆதலிற் பொருள்களைப் புலப் படுத்தற்கு உவமையும் சிறந்ததென்பது எவரும் அறியத்தக்க தொன்றும். அத்தகைய உவமையென்னும் அலங்காரத்தை, மேற் கூறியவாறு கம்பன் ஆளுந்திறத்தை இங்கே காட்டுதும்.

இராமனுக்கும் சீதைக்கும் விவாகம் நடந்தபோது, இராமனும் சீதையும் அக்கினியை வலம்வந்தார்கள். வந்தபோது இராமன் முன்செல்லச் சீதை அவனைத் தொடர்ந்து பின்னே சென்றாள். சென்றபோது, சீதையின் நினைவுமுழுதும் இராமனிடத்தே பதிந்து கிடந்தமையாலும் நாணினாலும் அவள் உயிரில்லாத ஒருடல் நடந்து போவதுபோலவே சென்றாள். அவ்வாறுசென்ற சீதையின்

இயல்பை அவ்வாறே காட்டவிரும்பிய கம்பன், இராமனுக்கு உயிரையும் சீதைக்கு உடலையும் உவமையாக்கி, அவ்விருவரும் உயிரும் உடலும்போலத் தோன்றுமாறு,

இடம்படு தோளவ னோடியை வேள்வி
தொடங்கிய செங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையள் மாறு பிறப்பில்
உடம்புயி ரைத்தொடர் பான்மையை யொத்தாள்.

என்று கூறினன்.

மறுபிறப்பிலே உயிரே உடலைத் தொடர்வதாயினும், வெற்றுடல்போலச் செல்வதாலும், கற்புடைப்பெண்டிர்க்குக் கணவரே உயிராதலாலும், சீதையையே உடலாகக் காட்டவேண்டுமாதலின் அவ்வுவமையை மாற்றி, உடம்புயிரைத்தொடர்பான்மையை யொத்தாள் என்றான் என்க. இஃது இல்பொருளுவமை. இதனால் தன் னுயிர் முன்னேசெல்லத் தான் பின்னேசென்ற ஒருடல்போலச் சீதையைத் தோன்றவைத்தமை காண்க.

இன்னும், இராமன் எய்த அம்பினாலே உயிரிழந்துகிடந்த வாலியைநோக்கி, அவன் மனைவியாகிய தாரையென்பாள் புலம்பும்போது, அவன் உயிரிழத்தற்குக் காரணமாய்நின்ற விதியை விளித்து, 'விதியாகிய தெய்வமே! என் கணவனும் யானும் உயிரும் உடலும்போல வாழ்ந்திருந்தோம். இப்பொழுது என்னுயிராகிய கணவனைப் பிரித்துவிட்டாய். உயிர்போனால் உடல் உய்ய மாட்டாமைபோல யானும் உய்யமாட்டேன்' என்று தன் நாயகனை உயிராகவும் தன்னை அவ்வுயிரைப் பிரிந்த உடலாகவும் குறித்துப் புலம்புகின்றாள். அவ்வியல்பினைக் காட்டப்புகுந்த கம்பன், அவ் வுவமையை இடத்துக்கேற்ப மாற்றி வேற்றுப்பொருளாக வைத்து,

துயரா லேதொலை யாத வென்னையும்
பயிரா யோபகை யாத பண்பினைப்
செயிர்தீ ராய்விதி யான தெய்வமே!
உயிர்போ னாலுட லாரு முய்வரோ.

என்று கூறுதல் காண்க.

இங்கே கம்பன் தாரையாகிய உடலுக்கு வாலியை உயிராகத் தோன்றவைத்தற்கே அவ்வுடலுயிர்களை வேற்றுப்பொருளாக வைத்து, அத் தாரைகூற்றாகக் கூறினன் என்க.

இன்னும், ஒரு தலைவன் தலைவியோடு செல்லும்போது, அவளன்பைப் பரிசோதிக்குமாறு, பக்கத்திலுள்ள குருக்கத்திக்கொடிகள் அடர்ந்து படர்ந்த ஒரு மரச்சூழலுக்குள்ளே மறைந்துநின்றான். நிற்பச் சட்டெனத் தன் கணவனைக் காணாத அம்மாது, முன் சிறிதும் அவனைப் பிரிந்தறியாதவளாதலால், சரீரம் பதைப்புற்று மனஞ்சுழன்று அவனை அங்குமிங்குமாகத் தேடித்திரிந்தாள். அவ்வாறு தன் நாயகனைத் தளர்ச்சியோடு தேடித் திரிந்த அவளினிலைமையைப் புலப்படுத்துமாறு, கம்பன் பொதுத்தன்மையாய் நின்ற வினைகளை, உடல்வினையும் அவள்வினையுமாக்கி,

மயில்போல் வருவாள் மனங்காணிய காதன்மன்னன்
செயிர்தீர் மலர்க்காவி னொர்மாதவிச் சூழல்சேரப்
பயில்வா ளிறைபண்டு பிரிந்தறி யாள்பதைத்தாள்
உயிர்நாடி யோல்கு முடல்போ லலமந் துழன்றாள்.

என்று கூறுதல் காண்க.

இங்கே கம்பன், உயிர்நாடியோல்கு முடல்போல் என நாடலையும் ஒல்கலையும் உடல்வினையாக்கிக் கூறியது தலைவனை உயிராகவும் தலைவியை அவ்வுயிரின் உடலாகவும் காட்டற்கென்க. நிற்க.

'உடம்புயிரைத்தொடர்பான்மையையொத்தாள்' என்ற கம்பன், அவ்வுவமையை மாற்றி,

ஓடி வந்தனன் சாலையின் சோலையி னுதவுந்
தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ லாடனைக் காணான்
கூடு தன்னுடை யதுபிரீந் தாருயிர் துறியா
நேடி வந்தது கண்டில தாமென நின்றான்.

என்னும் பாட்டில் 'உயிர் உடலைநாடி வந்ததுபோல்' எனக் கூறுதல் காண்க.

இச்செய்யுளில், சீதையைப் பிரிந்து மாரீசனாகிய மானைத் தொடர்ந்துசென்ற இராமன், மீண்டுவந்து அவளைக் காணாதவனாய், உயிர் தன்னுடைய உடலைப் பிரிந்துபோய்ப்பின், அதனைக் கருதித் தேடிவந்து காணாதுநின்றதுபோல நின்றான்: எனப், பொதுத் தன்மையாய்நின்ற வினைகளை உடலின்மேலும் இராமன்மேலும் ஏற்றிக்கூறியது, சீதையை உடலாகவும் இராமனை அவ்வுடலின் உயிராகவும் காட்டற்கென்க.

இன்னும், இந்திரசித்து விடுத்த பிரமாத்திரத்தினாலே அறிவிழந்து, மயங்கிக்கிடந்த தம்பியாகிய இலக்குவனை, இராமன் கண்டு மயங்கிவீழ்ந்து அறிவற்றுக் கிடப்ப, அவனை இறந்தான் எனக் கருதிய அரக்கர்சிலர் சென்று, 'இராமனும் இறந்துவிட்டான்' என்று இராவணனுக்குச் சொல்ல, அவர்கள்சொல்லை உண்மை என நம்பிய இராவணன் மகிழ்ந்து, சீதையை விமானத்திலேற்றிக் கொண்டுபோய் இராமனிறந்துகிடப்பதைக் காட்டுமாறு இராக்கத மகளிர்க்குக் கட்டளையிட, அவன் கட்டளைப்படி இராக்கதமகளிரும் சீதையை விமானத்திலேற்றிக்கொண்டுபோய் மயங்கிக்கிடக்கும் இராமனைக் காட்ட, அவளும் அவனைக் கண்டு உண்மையாக இறந்தான் எனக்கருதிப் புலம்பித் தானும் விமானத்தினின்றுங் கீழே வீழ்ந்து இறக்கக்கருதினாள். அப்போது அவள்கருத்தை அறிந்த திரிசடை என்பாள், 'இராமன் மயங்கிக்கிடக்கின்றானேயன்றி உண்மையாக இறந்தானல்லன்' என்று காரணங்காட்டித் தெளிவிப்ப, அதனால் சிறிது தெளிவடைந்த சீதை, இராமன் மயக்கந் தீர்ந்து எழுதலைப் பார்க்குங்கருத்தளாய் அவனைநோக்கியபடி நின்றாள். நிற்ப, அவளை அங்குநின்றும் மீளக் கொண்டுபோகக் கருதிய இராக்கதமகளிர், அவளுக்கு இராமனைவிட்டுப்போக மனமின்றாகவும், அவள் கீழேகுதித்துவிடாதபடி அவளை இருகரங்களாலும் இறுகப்பற்றிக்கொண்டு வலிந்து விமானத்தைத்திருப்பிக் கொண்டுபோனார்கள். அவ்வாறு அவளை வலிந்துகொண்டுபோன அவர்களினியல்பைக் காட்டவிரும்பிய கம்பன், அம்முகத்தானே

இராமனை ஒருயிராகவும் சீதையை அவ்வுயிரினுடலாகவும் தோன்ற வைக்குமாறு,

> தையலை யிராமன் மேனி தைத்தவேற் றடங்க ணாளைக்
> கைகளிற் பற்றிக் கொண்டார் விமானத்தைக் கடாவு கின்றார்
> மெய்யுயி நலகத் தாக விதியையும் வலிந்து விண்மேற்
> பொய்யுடல் கொண்டு செல்லு நமனுடைத் தூதர் போன்றார்.

எனக் கூறுதல் காண்க.

இதனுள், உயிர் பூமியிலேகிடப்ப விட்டு, அவ்வுயிரினின்றும் வலிந்துபிரித்து உடலைக்கொண்டுபோகும் மூடர்களான இயம தூதுவர்களைப்போல, இராமன் பூமியிலே கிடப்ப (மயக்கநீங்கி எழுகின்றானோ என்று அவனையே உற்றுநோக்கிநின்ற) சீதையை, அவனைநோக்கி நிற்கவிடாதபடி இராக்கதமகளிர் வலிந்து பிரித்துக் கொண்டுபோனார்கள்: எனக் கம்பன் மிகச் சுவைநயம்பெற உவமைபுணர்த்தி அவர்கள் கொண்டுபோன இயல்பைக் காட்டிய சாதுரியம் பெரிதும் போற்றப்படத்தக்கதொன்றாம்.

இங்ஙனமே, தசரதனது இறப்பை இராமன் சொல்லக்கேட்ட சடாயு தனதுநண்பனாகிய அத்தசரதனது பிரிவைக்குறித்துப் புலம்பியபோது,

> தயிருடைக்கு மத்தென்ன வுலகைநலி சம்பரனைத் தடிந்த வக்காள்
> அயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய நீயுடனா னவி யென்று
> செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய் செப்பினாய் திறம்பா நின்சொல்
> உயிர்கிடக்க வுடலைவிசும் பேற்றினா னுணர்விறந்த கூற்றி னாரே.

என்று தன்னை உயிராகவும் தசரதனை உடலாகவும் வைத்து நண்பின்பெருமைகூறிப் புலம்பியதாகக் கூறுங்காலும், உயிர்கிடக்க உடலைவிசும்பேற்றியது கூற்றின் அறியாமையாகும் எனக் கூற்றின் மேல் அறியாமையையேற்றிக் கூறி நகையாடல் எத்துணை இன்பந் தருவதாகும்.

இனி; ஒருபொருளின்செயலுக்கு முன்காட்டிய உவமையை மறவாமல் ஞாபகத்தில் வைத்திருந்து, பின்னும் அப்பொருளின் மறுதலைச்செயலுக்கும் அவ்வுவமையையே ஏற்ப எடுத்தாளுந் திறமும் கம்பன்பாலமைந்துள்ளதென்பதையும் இங்கே காட்டுதும்.

இராமன் தம்பியும் தானும் தசரதனைப் பிரிந்து, விசுவாமித்திரனோடு சென்றபோது, விசுவாமித்திரன்பின்னே அவ்விராமன் சென்றமைக்கு "மன்ன னின்னுயிர் வழிக்கொண்டாலென" எனத் தசரதனுயிரை உவமைபுணர்த்திய கம்பன், அவ்வுவமையை மறவாமல், தசரதன் மிதிலைக்குச்சென்றபோது, அவனை எதிர்கொள்ளவந்த இராமனது வருகைக்கும் உவமையாக்கி,

காவியுங் குவளையுங் கடியகா யாவுமொத்
தோவியஞ் சவிகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினான்.

என வினையை மாற்றிக் கூறுதல் காண்க. அங்ஙனங்கூறிய கம்பனுடைய ஞாபகசக்தி மிகவும் புகழத்தக்கதொன்றும்.

---

ஸ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்

## (கலைமகள்கழுத்தணி)

[ஸ்ரீ. V. S. ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள், B.A., B.L.]

௨௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### 5. அபக்ரமம்

𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑌦𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌯𑍌𑌗𑌪𑌦𑍍𑌯𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌃।
𑌦𑍋𑌷𑌃 𑌸𑍋𑌽𑌪𑌕𑍍𑌰𑌮𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌿𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑍌 𑌨 𑌦𑍁𑌷𑍍𑌯𑌤𑌿॥ ॥

வாக்கியங்களிலேனும் செய்யுட்களிலேனும் பொருள்களை முன்பின் முறைமாறுபடுமாறு கூறுதல் அபக்ரமம் என்னும் குற்றமாம் (என்று முன்பு கூறப்பட்டது); எனினும், சித்திரவேதுவணியின்கண் காரணகாரியங்களை முறைபிறழக் கூறுதல் குற்றமாகாது; மற்று அவ்வாறு முறைபிறழக் கூறுதலால் கூறும்பொருள் பெட்புறுமாதலால் அது குணமெனப்படும்.

உதாரணம்:—

𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌿𑌰𑌣𑌾𑌨𑍁𑌦𑍀𑌰𑍍𑌣𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌹𑌰𑌿𑌣𑌾𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌮𑍁𑌦𑍀𑌰𑍍𑌣𑍋 𑌰𑌾𑌗𑌸𑌾𑌗𑌰𑌃॥

கிரணங்களைப்பரப்பிக்கொண்டு சந்திரமண்டலம் பின்பே உதித்தது, பிணைமான்போலும் நோக்குடைய மடந்தையர்க்குக் காமமாகிய கடல் முன்பே பெருக்கெடுத்துவிட்டது.

இங்கே, காமக்கடல் கொந்தளித்தலாகிய காரியத்துக்குரிய காரணம் மதியின்தோற்றம்; அக்காரணம் காரியத்துக்குமுன்பே நிகழ்ந்ததாகவும் அதனல் தோன்றும் காரியம் பின்நிகழ்ந்ததாகவும் கூறுதல் முறை. அம்முறையிற்கூறாது காரணமாகிய சந்திரோதயம் காரியமாகிய காமக்கடல் கொந்தளித்ததற்குப்பின்பு நிகழ்ந்ததாகக் கூறியிருத்தலின் இது காரணகாரியங்களின் முறைதடுமாற்றமாய் அபக்ரமம் என்னும் குற்றமாவதற்கேற்புடையதுபோற் றோன்றும்.

ஆயினும், 'காரணம் நிகழுமுன்பே காரியம் நிகழ்ந்துவிட்டதென்று கூறுமுகத்தால் காரியவிளைவை மிகுத்துரைத்தல், கூறுவோனுக்குக் கருத்தாதலின் இது பொருட்சிறப்புக் குபகாரப்பட்டுக் குணமாயிற்று

## 6. கின்னம்

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌰𑍀𑌤𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌃 𑌵𑌿𑌨𑌾 𑌤𑌦𑌹𑍀𑌯𑌤𑍇 ।
𑌨 𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌛𑌾𑌯𑌾 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ ௧௪௧ ॥

எவ்விடத்தில் ரீதி(நடை)யை நிர்வஹிக்க இயலவில்லையோ அங்கே கின்னம் என்னும் குற்றமுளதாம் என்று முன்பு கூறப்பட்டது; ஆயினும், அவ்வாறு தொடங்கிய ரீதியை நிர்வஹிக்க இயலாது வேறுரீதியைத் தழுவினும் யாண்டு அழகு கெடவில்லையோ ஆங்குக் குற்றமாகாது குணமேயாம்.

உதாரணம்:—

𑌊𑌷𑍍𑌮𑌾 𑌨𑌵𑌵𑌧𑍂𑌰𑍋𑌷𑌸𑌦𑍃𑌶𑌃 𑌕𑌰𑍀𑌷𑌦𑌹𑌨𑌜𑌨𑍍𑌮𑌾
𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌜𑌨𑌾𑌶𑍍𑌲𑍇𑌷𑌕𑍃𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌲𑍇𑌯𑌵𑌾𑌹𑍀 𑌸𑌮𑍀𑌰𑌣𑌃 ।
𑌹𑍃𑌤𑌵𑌿𑌭𑌵𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑍇𑌵𑌾𑌦𑍍𑌯 𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌾 𑌰𑌵𑍇𑌃
𑌵𑌿𑌰𑌹𑌵𑌿𑌧𑍁𑌰𑌵𑌨𑌿𑌤𑌾𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍌𑌪𑌮𑍍𑌯𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌨𑌿𑌶𑌾𑌕𑌰𑌃 ॥

காய்ந்த சாணத்திற் பற்றிய தீ புதிய வதுவைமடந்தையின் சினம்போன்றுள்ளது. பனியுடன்கூடிய குளிர்காற்று அன்பிலா மாதரைத் தழுவுதல்போன்றுளது. பரிதியின் ஒளி, செல்வம்தீர்ந்து தாழ்நிலையுற்றவனது ஆணைபோல மங்கிவிட்டது. சந்திரன், காதலனைப்பிரிவுற்ற மடந்தையின் முகத்தின் இயல்பை வஹித்துள்ளான்.

இங்கே சுலோகநடை முதலில் உவமத்தொகையாகவும் பின்பு உவமவிரியாகவும் ரீதி மாறியிருத்தலால், தொடங்கிய ரீதியைக் கடைபோகச் செலுத்தாமையாகிய கின்னம் என்னும் குற்றமுளதாமெனத் தோன்றினும், அவ்வாறு ரீதி மாறுபட்டுநிற்றலால் செய்யுள்நடையின் ஒளி கெடாது சிறப்புற்றுநிற்றலின் இதுபோல்வன குணமேயாம்.

## 7. அதிமாத்ரம்

லோகாதீத இவார்தோ²ய: ஸோऽதிமாத்ர இஹேஷ்யதே ।
வார்த்தாதௌ³ தேந துஷ்யந்தி வித³க்³தா⁴ நேதரே ஜநா: ॥ ௧௪௨ ॥

தத்³ வார்த்தாபி⁴தா⁴நேஷு வர்ணநாஸ்வபி த்³ருʼஶ்யதே ।
காந்தம் ஜக³தி தத் காந்தம் லௌகிகார்தா²நுயாயி யத் ॥ ௧௪௩ ॥

லௌகிகார்த²மதிக்ரம்ய ப்ரஸ்தா²நம் யத் ப்ரவர்ததே ।
தத³த்யுக்திரிதி ப்ரோக்தம் கௌ³டா³நாம் [illegible] ॥ ௧௪௪ ॥

பொருள்களைக் கூறுமிடத்து உலகநெறியைக்கடந்து மிகைப் படுத்துக் கூறுதல் அதிமாத்ரம் என்னும் குற்றமாகக் கூறப்படும். வார்த்தை (ஆர்வமொழி) முதலியவிடங்களில் அவ்வாறு மிகுத் துக்கூறுதலைப் பண்டிதரே உவப்பர், ஏனையோர் அதனால் மகிழார். அம்மிகுத்துரை வார்த்தை (ஆர்வமொழி) கூறுமிடங்களிலும் வருணனைப்பகுதிகளிலுமே (பெரும்பாலும்) காணப்படுகின்றது. உலகொழுக்கிறவாமைக் கூறுதலே காந்தமென்னும் குணமெனப் போற்றப்படுவதாயினும், அந்நெறியின் வரம்புகடந்துநிகழும் ஒரு சார்நெறியும் கௌடகவிகளின் மனமகிழ்ச்சியின்பொருட்டு "அத்யுக்தி" என்று கொள்ளப்படுவதாயிற்று.

உதாரணம்:—

தே³வதி⁴ஷ்ண்யமிவாராத்⁴யமத்³ய ப்ரப்⁴ருʼதி நோ க்³ருʼஹம் ।
யுஷ்மத்பாத³ரஜ:பாததௌ⁴தநி:ஶேஷகில்பி³ஷம் ॥

உமது பாதத்துகள்படுதலால் பாவம் முழுவதும் நீங்கிய எம் இல்லம் இன்றுமுதல் தேவர்கோட்டம்போலப் பூசிக்கத்தக்கதாய் விட்டது.

இங்கே அதிமாத்ரம் என்னும் குற்றம் தங்குதற்கிடனுண் டாயினும், சான்றோர்சிலரைநயந்து ஆர்வமொழிகூறுவோன்கூறும் கூற்றாதலால் ஈண்டு அது வழுவாகாது, அத்யுக்தி என்னும் குணமே யாம். இது கௌடநெறியாரால் விரும்பப்படுவதாம்.

உதாரணம்:—

𑌅𑌲𑍍𑌪𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑌾𑌕𑌾𑌶𑌮𑌨𑌾𑌲𑍋𑌚𑍍𑌯𑍈𑌵 𑌵𑍇𑌧𑌸𑌾 ।
𑌇𑌦𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑌂 𑌭𑌾𑌵𑌿 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌨𑌜𑍃𑌮𑍍𑌭𑌣𑌮𑍍 ॥

பெண்ணே! பிரமதேவன் உனது கொங்கைகளின் வீங்குதலை முன்பே அறிந்துகொள்ளாமல் ஆகாசத்தைச் சிறிதாகப்படைத்து விட்டான். (அறிந்திருப்பின் அதை இன்னும் மிகப்பெரிதாகப் படைத்திருக்கற்பாலன்).

இது கொங்கையை வருணித்துக்கூறுங்கருத்துடையோன் கூறியதாதலால், இங்கே அதிமாத்ரம் என்னும் குற்றமின்றி, அத்யுக்தி என்னும் குணமாம் என்பர் கௌடர்.

அவ்விரண்டிடத்தும் மிகையின்றிக் கூறுமாறு.—

உதாரணம்:—

𑌗𑍃𑌹𑌾𑌣𑌿 𑌨𑌾𑌮 𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌤𑌪𑍋𑌰𑌾𑌶𑌿𑌰𑍍𑌭𑌵𑌾𑌦𑍃𑌶𑌃 ।
𑌸𑌂𑌭𑌾𑌵𑌯𑌤𑌿 𑌯𑌾𑌨𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑌾𑌵𑌨𑍈𑌃 𑌪𑌾𑌦𑌪𑌾𑌂𑌸𑍁𑌭𑌿𑌃 ॥

(இது ஆர்வமொழி.)

உம்மையொத்த மாதவத்தோர் தமது புனிதமாய திருவடித் துகளால் எந்த வீடுகளை மேம்படுத்துவரோ அவையே வீடென்று கூறுதற்குரியவை.

உதாரணம்:—

𑌘𑌨𑌯𑍋𑌰𑌨𑌵𑌦𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌿 𑌸𑍍𑌤𑌨𑌯𑍋𑌰𑍍𑌜𑍃𑌮𑍍𑌭𑌮𑌾𑌣𑌯𑍋𑌃 ।
𑌅𑌵𑌕𑌾𑌶𑍋 𑌨𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑌵 𑌬𑌾𑌹𑍁𑌲𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ॥

(இது வருணனை)

காரிகைசீர்மையாய்! மேன்மேல்விம்முமியல்புள்ள உன் தனங்களுக்கு, உனது கொடிபோன்ற இருகைகளுக்குமிடையே போதிய இடம் இன்றே.

## 8. பருஷம்

பாருஷ்யம் நிஷ்டுராத்யர்த்தம் யததீவ விகர்ஹிதம் ।
விருத்தலக்ஷணாதஸ்ய தத்திஷ்டம் ந துஷ்யதி ॥ ௧௬௫ ॥

கொடுமைமிக்கவகையாற்கூறின் அது பருஷம் என்னும் குற்றமாம்; அது மிகவும் வெறுக்கப்படுவதொன்றும்: ஆயினும், விருத்தவிலக்கணமுதலியவற்றால் பொருளின்கொடுமை மாறிநிற்குமிடங்களில் அது குற்றமாகாது குணமாய்த் தோன்றும்.

உதாரணம்:—

ஹாலாஹலம் விஷம் புங்க்ஷ்வ ஸகி மா தத்ர விஶ்வஸீ: ।
யதா ந தஹ்யஸே காஷ்டை: ஶ்வோ ஶ்வோ ஸ்வஸ்தீதி மே மதி: ॥

தோழீ! ஆலகாலவிடத்தை உண்பாய். அவ்விடயத்தில் நம்பிக்கைகொள்ளாதொழி. சிலவாய விறகுக்கட்டைகளால் நீ எரிக்கப்படமாட்டாய் என்று நான் நினைக்கிறேன்.

இங்கே கூறியபொருள் கொடுமைபொருந்தியதாயிருத்தலின் இதன்கண் பருஷம் எனும் குற்றம் தங்குமாயினும், விருத்தவிலக்கணையால் வேறு கொடுமையில்லாதபொருள் தோற்றுவிக்கப்படுதலின் இது குற்றமில்லாது குணமாம்.

## 9. விரஸம்

அப்ரஸ்துதரஸம் ப்ராஹுர்விரஸம் வஸ்து ஸூரய: ।
அப்ராயாதேந தத்தோஷோ வ்யம்ஸிதை: ஸ்யாத் ப்ரஸ்துதவஸ்துந: ॥ ॥

சுவைகள் அவ்வவ்விடத்தொடு பொருந்தாவகையால் அமைக்கப்பெறின் ஆங்கே விரஸம் எனும் குற்றமாமென்பர் புலவர்; ஆயினும், நுவல்பொருள் சுவை என்பவற்றுள் நுவல்பொருளே முக்கியமானதாகவும் சுவை அத்துணைத் தலைமையற்றதாய் அந்நுவல்பொருளுக்கு அங்கமாயதாகவும் கருதியுள்ளவிடத்தில் சுவை மாறுபட்டிருப்பினும் குற்றமாகாது, (நுவல்பொருளைப் பெட்புறச்செய்தலால்) குணமேயாம்.

உதாரணம்:—

𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍋 𑌹𑌸𑍍𑌤𑌾𑌵𑌲𑌗𑍍𑌨𑌃 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌭𑌿𑌹𑌤𑍋
𑌽𑌪𑍍𑌯𑌾𑌦𑌦𑌾𑌨𑍋𑌽𑌂𑌶𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑌂
𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌕𑍇𑌶𑍇𑌷𑍍𑌵𑌪𑌾𑌸𑍍𑌤𑌶𑍍𑌚𑌰𑌣𑌨𑌿𑌪𑌤𑌿𑌤𑍋
𑌨𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌸𑌮𑍍𑌭𑍍𑌰𑌮𑍇𑌣 ।
𑌆𑌲𑌿𑌙𑍍𑌗𑌨𑍍𑌯𑍋𑌽𑌵𑌧𑍂𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌯𑍁𑌵𑌤𑌿𑌭𑌿𑌃
𑌸𑌾𑌶𑍍𑌰𑍁𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌪𑌲𑌾𑌭𑌿𑌃
𑌕𑌾𑌮𑍀𑌵𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌃 𑌸𑌦𑌹𑌤𑍁 𑌦𑍁𑌰𑌿𑌤𑌂
𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑍋 𑌵𑌃 𑌶𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 ॥

நீர்ததும்பிய கண்களையுடைய திரிபுராசுரன்காதலியரால், குற்றஞ்செய்து உடனேவந்த காதலனைப்போலக் கையிடையே புகுந்தும் தள்ளப்பட்டதும், புடைவைத்தலைப்பைத் தீண்டியவுடன் நன்குதாக்கப்பட்டதும், கூந்தலைத்தொட்டவுடன் விலக்கபட்டதும், காலில்விழுந்தும் பரபரப்புடன் பார்க்கப்படாததும், தழுவிக் கொண்டவழியும் நீக்கப்பட்டதுமான சிவபிரானுடைய அம்பினகத் துத்தீ உம்மைக் காப்பதாக.

சிவபிரான் சராக்கினியால் திரிபுரவனிதையர் துன்புறுதலைக் கூறும் இவ்விடத்தே, கருணைச்சுவையே அமைத்தற்குரியதாயிருப்ப, சிருங்கார (-காம)ச்சுவையையமைத்திருப்பது பொருந்தாததாய் விரஸம் என்னும் குற்றத்திற்கிடனுமாயினும், கூறுவோனுக்குச் சுவையைத் தலைமையாக அமைத்துக்கூறுதல் கருத்தன்றிச் சிவபிரானது அம்பின்பிரதாபத்தைச்சிறப்பித்தலே கருத்தாதலானும், ஈண்டுக் காமச்சுவையமைத்திருப்பதனால் நுவல்பொருள் குறை சிறிதுமின்றிச் சிறப்புறுதலானும் ஈண்டு விரஸம் எனும் குற்றமுளதாகாது, குணமேயாம்.

[தொடரும்.]

ஸ்ரீ:

# இராமசெயம்*

(இராமாயணத்திருப்புகழ்)

## உத்தரகாதை

மிடிவரு மாகில் விஞ்சு
பிணிவரு மாகின் மண்டு
வினைவரு மாகி லங்க ணுரியார்தீ

விழவரு மாகின் முன்சொல்
கதைவரு மாகின் முந்து
விதம்வரு மாகி லுன்ற னுயர்கோயிற்

கடைவரு மாகி லன்பர்
குழுவரு மாகில் வெம்பு
கயவரு நேரி ரங்கி யரிராமா

கருணைசெய் வாழி யென்ப
ரிவைகளு மேய நெஞ்சு
கரையிலெ நானி ருந்த பிழைபாராய்

குடமுனி யோடு நின்ற
முனிவரெ லாமெ முந்து
கொழுமறை யோதி வந்து நகர்மேவிக்

குணமொடு காண வன்று
சுகமுள தோவு யர்ந்த
குரவரெ லாம்வி ளம்பு மெனலோடும்

---

* இராமசெயத்தின் யுத்தகாண்டம் செந்தமிழ் 36, 37-ஆம் தொகுதிகளில் வெளியிடப்பெற்றமை செந்தமிழ்நேயர் அறிந்ததே. இதுபொழுது எஞ்சிய உத்தரகாண்டமும் சங்கத்திலுள்ள ஒரே ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு, (அவ்வொரே ஏட்டுப்பிரதியும் நாளடைவிற் சிதைந்தும் பிறழ்ந்தும் இறந்தும் அழியாதபடி பாதுகாக்கும்நோக்குடன்) வெளியிடப்படுகிறது.

இடரிலே மாத வங்கள்
குறையிலே வேள்வி யொன்று
மிடரிலே வாழி யென்று மறைவாணர்
இருபுடை சூழ வென்றி
யரியணை மீதி ருந்த
ரகுபதி யேதெய் வங்கள் பெருமாளே. (1)

பரவு தந்தை பெறுதாயர் மந்த்ர
நெறிவி ளம்பு குருவாண ருண்டி
பசிய றிந்து பகிர்வார்செ கங்க ளறியாதே
பழிக ளைந்து விடுவார்ந டுங்கு
முயிர்ப ரந்து தருவார ளந்து
படியி டுங்கை யுடையார்ம ருந்து விடுவார்தம்
பொருவில் பண்பு மவர்சீரு மெந்த
வசட ருந்த முளமீது கொண்டு
புகழ்வ ரிந்த வகையாரை யுங்க ணறையாமென்
புகையெ முந்த வநியாய நெஞ்சு
மிகம றந்து விடுமேபி றந்து
புலைபொ ருந்து மடியேனு மின்ப மடைவேனே
அருகு வந்த மறையோரி லங்கை
நிருதர் தங்கள் பதியோடு தம்பி
அழிய நின்று பொருதாவி மைந்தன் வலிமாள
அமர்பு ரிந்த வகையேதி யம்பு
கெனவு மந்த மறையோரின் முந்த
வதிக னிந்த்ர விணையாள னென்றி ரவியோனல்
உரமி குந்த வவன்வீரி யங்கள்
அவன தந்தை மரபோரி ரண்டு
முலகின் வந்த வரலாற டங்க வொளியாதே
உடனி ருந்த படியால முன்பி
னடைய வின்று தமியேன்வி ளங்க
வுரைமி னென்று திருவாய்ம லர்ந்த பெருமாளே.

குருவை யன்றியு னைத்தொழு வாரொரு
பொருளு மன்றியு னைப்புகல் வாரொரு
குழைவு மின்றியு னைத்தெளி வாருடன் மிசையேநீள்

குணம தன்றியி யற்கைசெய் வார்தலை
படித லின்றியு னைப்பணி வார்புனல்
குடைத லின்றியுன் முற்படு வார்குவி முகுளாகு

மிருகை யன்றியு னைத்தொழு வார்விரி
துளவை யன்றியு னைப்புனை வார்பெறு
மிசைக ளன்றியு னைச்சில பாடுதல் புரிவார்தா

மிவர்க ளுங்க்ருபை பெற்றிடு வாரவ
ரவரி லுங்கடை கெட்டவ னுனினி
யெனையு மிங்கடி மைக்கொள நீயருள் புரிவாயே

திருவி ரும்பிய வுத்தம நாபியின்
முனிப யந்தபு லத்திய மாமுனி
திரண பிந்தும கட்கிறை யாயபி ணவர்பாலன்

திடமி குந்திடு விச்சுரு வாமுத
லொருவி ருந்திடு மெய்த்தவன் மாமகள்
செழுந லங்கொள மிக்கரு பேரனோர் மகவாகி

யுருகி நின்றிசை நற்றவ மானது
பிரமர் கண்டொரு புட்பவி மானமு
முரிய சங்கொடு பற்பமும் வாசவன் முதலோர்போல்

உலகு கொண்டதி சைக்கொலு காவலு
மருள வந்தன முற்கதை யீதென
உரைசெய் கும்பமு னிப்ரிய னாகிய பெருமாளே. (3)

இருக்கால்வ ணங்கிநில் லாமல்
ஒருக்காலு மன்புசெய் யாமல்
எழுத்தேய்ந றுந்தொடை மாலை புனையாமல்

எழுத்தாறி ரண்டுமெண் ணாமல்
வழுத்தாம லுன்றனை யேயுள்
இருத்தாம லிங்குள நாள்கள் அவமானேன்

முரட்பாவி வஞ்சகன் மோடன்
மருட்பாத கன்கொலை காரன்
முழுப்பாவி வம்பன்வ்ரு தாவன் வினையேன்யான்

முதற்றேவ ருந்தெளி யாவுன்
அருட்கோயில் கும்பிடு போதென்
முறைக்கேடு கண்டடி யார்கள் நகையாரோ

வரத்தாலு யர்ந்தகு பேரர்
திருத்தாதை வன்பத மேவி
மதிப்பாமி டந்தர வேணு மெனவேலை

வளைப்பாமி டந்திரி கூட
கிரிப்பேரி லங்கையவ் வூரின்
மறத்தோடி ருந்தவர் நாளு நிருதேசர்

அருட்கேச வன்பொரு போரில்
ஒளித்தோடி வன்பில மேவ
அறப்பாழ்கி டந்ததவ் வூரி வினிநீபோய்

அறத்தோடி ருந்துயிர் வாழ்தி
யெனப்போன முன்கதை கூறும்
அகத்யாதி யன்பர்ப ராவு பெருமாளே. (4)

குலத்தைவி டேன்முனி ருந்த
மதத்தைவி டேன்முதல் வெம்பு
குணத்தைவி டேனவ லங்க ளெனவீறுங்

குடுப்பைவி டேன்முன டந்த
நடப்பைவி டேன்வரு பெண்கள்
குணிப்பைவி டேனுனை வந்து தொழுதாலென்

இலக்கண கீனம றிந்து
பழிப்பற மேவிய தொண்டர்
எனைச்சுளி வாரது கண்ட தமியேனும்

இலச்சையி லேனினி யுன்றன்
விழிக்கடை சேரரு ளன்றி
யெனக்கொரு சார்பிலை யென்ப தறியாயோ

புலத்திய னார்வழி வந்த
வியக்கர்ம கேபனே யின்று
புலப்பட வோதினே மூந்து நிருதேசர்

புறப்படு போருமு குந்தன்
அழித்ததும் வீறுகு லேந்து
புலேத்தொழி லாளர டங்கி வறிதேபோய்

அலக்கணி னேடுபி லங்கள்
பிடித்தது மோதியி ருந்த
அடற்படை யோடுமி லங்கை நகர்மீள

அரக்கர்கு லாதிபர் வந்து
குடிப்புகு நீதிய டங்க
அகத்திய னேயுரை யென்ற பெருமாளே. (5)

துயராமி ருட்டுச் சூழி
யழகாமு முக்கற் பாறை
சுழனீள்பு கைக்கொட் டார மயலூழல்

தொலேயாவ வத்தைக் கேணி
குழையாத பெட்டைக் காடு
சொரியாத வொட்டுத் தூற லறிவாநீர்

பயிலாத வட்டத் தேரி
கறவாம லட்டுப் பாவி
பழியாது குப்பை கூள மனமாகும்

படிநீவி தித்தி டாயென்
வசமோவ சட்டுத் தாரை
படையாதி ருக்கக் கூடு மெனலாமோ

அயனார்வ குப்புக் கோலு
முதனாரு யிர்த்திட் டோரில்
அதிகோப வுக்கிரத் தோர்க ணிருதேசர்

அடைவாய வர்க்குக் கூடு
பிரகேதி பிற்கி லேதான்
அடலேதி திட்டப் பாவி நமனார்பின்

வயமாவு தித்திட் டாளை
மணமேவ மற்றப் பாவை
வயின்வீறு வித்துக் கேசன் உளனை
வரலாறு தெற்குப் போன
முனியோத மெச்சிக் காணும்
வராம முத்தித் தேவர் பெருமாளே. (6)

முத்துத் தாவட குங்கும லேபன
நற்கற் பூரசு கந்தச ரோசமு
கைக்கொப் பானவ லங்க்ருத சீதள வழகார்வார்
முச்சிக் கோலநி ரந்தர பூரிதர்
கெற்சிப் பாகர பஞ்சம ரேசர்மு
டிக்கொத் தானப்ர சண்டக ராசல வதிரூப
சித்ரப் பாரவ சஞ்சல கோமள
ரெத்நப் பூஷண கும்பச மானசெ
கத்துச் சேரம யங்குவ சீகர முலைமானை
தித்திப் பூறிய செங்கனி வாயமு
தத்தைப் போதமு னுண்டுவி டாய்கொடு
சிக்கிப் போதுக ழிந்தது போதுமுன் அருள்தாராய்
வித்துக் கேசனொர் சந்திதன் மாமகள்
கொற்றச் சாலக டங்கடர் பூண்முலை
வெற்பைக் கூடிட வந்துசு கேசனொர் மகவானன்
விட்டுப் போயின ரங்கவர் சேயிடி
யொத்துப் போதவி ழுந்தழு காலையில்
வெற்றிச்சூலமு மங்கையு மாய்மிகு க்ருபையார்கண்
வைத்துப் பாரத னங்கொடு பாலும
ருத்திப் போகவ வன்மிளிர் தேவவ
திக்குக் காதன்ம ணஞ்செய மாலியொ டொருமூவர்
மக்கட் பேறென வந்தனர் மாதவ
மெத்தத் தேடின ரென்றுயர் மாமுனி
மற்றுக் கேளென வங்கது கேள்விசெய் பெருமாளே. (7)

[தொடரும்]